# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்**,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 12899 / 2012 / எம்சி. 8 நாள் : 27.11.2012**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற **29.11.2012 வியாழக்கிழமை காலை 10.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

**இணைப்பு : 1**

**/ உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - நவம்பர் 2012

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | நகரமைப்புப் பிரிவு - அனுமதியற்ற மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடங்களை முறைப்படுத்துதல் - அரசாணை வெளியிடப்பட்டது – தினசரி நாளிதழ் மற்றும் தொலைக்காட்சியில் விளம்பரம் செய்தல் - அரசாணையை பதிவு செய்தல் - தொடர்பாக. |
| 2 | பொது சுகாதாரப்பிரிவு – கொசு ஒழிப்புப் பணிக்காக – அவசர அவசியத்தை முன்னிட்டு – தற்காலிகமாக 100 பணியாளர்களை 14.10.2012-ம் தேதி முதல் மேலும் இரண்டு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தது – மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது - சம்பந்தமாக. |
| 3 | பொது சுகாதாரப் பிரிவு - கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித்தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| 4 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 1 – துடியலூரில் உள்ள மயானத்தில் மராமத்து பணிகள் செய்தல் - மதிப்பீட்டைக்காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்டது - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 48 – காந்திபுரம் 7வது வீதி தொடர்ச்சி பாலம் முதல் சங்கனூர் சாலை வரை மறுதார்தளம் அமைத்தல் - மதிப்பீட்டைக்காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்டது - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| 6 | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 69க்குட்பட்ட சமுதாயக் கூடம்- மெர்சி ஹோம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு வாடகைக்கு அளிப்பது – மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |
| 7 | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - ராமகிருஷ்ணாபுரம் வணிக வளாகக் கடை எண் 1-க்கு 05.10.2012 ம் தேதியில் நடைபெற்ற பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது - தொடர்பாக. |
| 8 | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு -விளாங்குறிச்சி ரோடு - வணிக வளாக கடைகளின் ஏலக் கோரிக்கைகளை ஏற்றல் - வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது - தொடர்பாக. |
| 9 | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - மாத வாடகை கடைகள் - உரிமம் ஒப்படை செய்தல் - வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது - தொடர்பாக. |
| 10 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 18 – ஓம் கணேஷ் நகரில் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடக் கட்டிடம் -வாடகை நிர்ணயம் செய்தல் - வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது - தொடர்பாக. |
| 11 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் - மாநகராட்சி கட்டிடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வாடகை உயர்வு செய்தல் – வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது - தொடர்பாக. |
| 12 | கல்விப்பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 10ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு பாட வாரியாக வினா வங்கி அச்சிட்டு வழங்குதல் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | மத்திய மண்டலம் - வார்டு எண் 48 – கணேஷ் நகர் மற்றும் காந்திபுரம் 5வது வீதியினை இணைக்கும் வகையில் சங்கனூர் பள்ளத்தின் குறுக்கே பாலம் கட்டுதல் - குடியிருப்புகளை காலி செய்த 6 நபர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| **14** | மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண்.24 சாஸ்திரி மைதானத்தை வேறு நிகழ்ச்சிக்களுக்கு அனுமதி வழங்குவதை தவிர்த்து சிறுவர்கள், மாணவ மாணவிகள் விளையாடுவதற்கு பயன்படுத்துதல் – மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| **15** | மேற்கு மண்டலம் - வார்டு எண் 23 – மாநகராட்சி கலையரங்கத்தில் தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தினரால் நிகழ்ச்சி நடத்தப்பட்டது – வாடகை தொகை பெறப்பட்டது – பெறப்பட்ட வாடகைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டது – செலுத்தப்பட்ட தொகையினை பதிவேடுகளில் ரத்து செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| **16** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண்.71-ல் 6322.16 சதுரடியிலுள்ள புலியகுளம் திருமண மண்டபத்தை பொது ஏலம் மூலம் தனியார் பராமரிப்புக்கு ஒதுக்கீடு செய்யவும், ஏலதாரர் செலுத்த வேண்டிய வைப்பு தொகை மற்றும் இதர கட்டணங்கள் நிர்ணயம் செய்து ஏல நிபந்தனைகளுக்கு ஒப்புதல் பெறுவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **17** | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 93 - இடையர்பாளையம், வினாயகர் கோயில் வீதி - சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி 2010 - 2011ம் ஆண்டு வளர்ச்சி திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலக கட்டிடத்திற்கு மாத வாடகை நிர்ணயம் செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| **18** | பொறியியல் பிரிவு - இராமநாதபுரம் மற்றும் சிங்காநல்லூர் சிக்னல் முன்பு உள்ள சாலை பகுதிகளில் பொது மக்கள் சாலையினை கடக்க சாதாரண நடைப் படிக்கட்டுடன் கூடிய மேல்நிலை நடைபாதை (SKY WALK)அமைத்தல் - தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவை லிமிடெட் மூலம் மதிப்பீடு தயாரித்தல் - மாமன்ற ஒப்பதல் கோருதல் – தொடர்பாக. |
| **19** | பொறியியல் பிரிவு -கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யவும் பிளம்பர்கள் உரிமம் வழங்குவது – மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக. |
| **20** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 48 – முத்துக்குமார் நகரில் உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உடற்பயிற்சி சாலை கட்டுதல் - மதிப்பீட்டைக்காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்டது - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| **21** | நகரமைப்பு பிரிவு - தெற்கு மண்டலம் - புதிய வார்டு எண் 85 மற்றும் 78-ல் நகர விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 18 மற்றும் 19ல் அமையும் CC60 அடி திட்டச்சாலை மற்றும் AA 60 அடி திட்ட சாலைகள் பொன்னையராஜபுரத்தில் இருந்து செல்வ சிந்தாமணி குளக்கரை வழியாக செல்வபுரம் வடக்கு ஹவுசிங் யூனிட் வரை சாலை அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| **22** | நகரமைப்பு பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் – வடவள்ளி கிராமம் – புல எண். 421/1 ல் உள்ள 0.06.0 ஹெக்டேர் (15 சென்ட்) நிலத்தினை வடவள்ளி சார்பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு நில மாற்றம் செய்திட மாநகராட்சியின் இசைவினை தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டுதல்– தொடர்பாக. |
| **23** | பொது சுகாதாரப் பிரிவு - துப்புரவுப் பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்வது – திரு.எம். முகம்மது சுலைமான் - ஆய்வக தொழில்நுட்ப பணியாளரை தொகுப்பு ஊதியத்தில் 12.09.2012 முதல் 3 மாத காலங்களுக்கு பணிபுரிய அனுமதிக்கப்பட்டது - மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டுதல் - தொடர்பாக |
| **24** | பொறியியல் பிரிவு – சிறுவாணி – பில்லூர் II குடிநீர் திட்டங்களை இணைத்தல் - இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பில்லூர் II-ம் குடிநீர் திட்டத்திலிருந்து பாரதி பூங்காவிலுள்ள சிறுவாணி நீர்த்தேக்க தொட்டிக்கு இரும்பு நீர்க்கொணரும் குழாய்கள்(MS Pipes) இணைத்து குடிநீர் விநியோகம் செய்தல்- மதிப்பீட்டுத் தொகை ரூ.1716 லட்சம் - விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது – அரசிடமிருந்து நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திலிருந்து நிதி உதவி, தொழில்நுட்ப அனுமதி பெற்று திட்டம் செயல்படுத்த மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **25** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு மாநகராட்சிகள் 1996ம் ஆண்டு பொதுப் பணியமைப்பு விதிகள் வகுப்பு II வகை 4ன்படி நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு வகுப்பு III பிரிவு–I வகை 1 மற்றும் 2 பணியாளர்களான கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியல் மாமன்றம் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **26** | நகரமைப்பு பிரிவு- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் இருந்து நேரு விளையாட்டு அரங்கத்தினை கோயம்புத்தூர் மாநகராட்சி வசம் எடுத்து பராமரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **27** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண்.51 - பொன்னே வீதி மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **28** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் வணிகவளாக கடைகளுக்குண்டான பொது ஏல நிபந்தனைகளுடன் கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சிறப்பு நிபந்தனைகளாக சேர்ப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி கோருவது- தொடர்பாக |
| **29** | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - 4 குத்தகை இனங்கள் - 5 சதவிகிதம் உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **30** | மத்தியமண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண்.72 நஞ்சப்பா ரோடு மாநகராட்சி வணிக வளாகத்தில் உள்ள அரசு அலுவலகத்திற்கு உயர்த்தப்பட்ட வாடகையினை மறு பரிசீலனை செய்ய கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **31** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண்.51,72 மற்றும் 82-ல் உள்ள பள்ளி வளாகம் மற்றும் பிரதான அலுவலகத்தில் இயங்கி வரும் தமிழ் நாடு மின்சார வாரிய அலுவலகங்களுக்கு 01.01.2013-ல் பொது பணித்துறை வாடகை மதிப்பீட்டின்படி மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **32** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - மாத வாடகைக் கடைகள் - வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **33** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - குத்தகை இனங்கள் 01.04.2013 முதல் 31.03.2016-ம் ஆண்டு வரை ஒப்படைக்க பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **34** | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - மாத வாடகை இனங்கள் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - ஆவின் பாலகம் மூன்றாண்டு முடிவு - மாத வாடகை நிர்ணயம் செய்தும் மற்றும் மாற்றுத்திறனாளிக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |
| **35** | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - மாத வாடகை இனங்கள் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - டேண்டீ மூன்றாண்டு முடிவு - மாத வாடகை தொகை நிர்ணயம் செய்து உரிமம் நீட்டிப்பு செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |
| **36** | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமையாணை இனம் நீக்கம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **37** | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - குத்தகை இனங்கள் - 01. 04. 2013 முதல் 31.03.2016 ம் ஆண்டு வரை ஒப்படைக்க - பொது ஏலம் நடத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **38** | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வரும் மின்வாரிய கட்டிடத்திற்கு 01.01.2013 முதல் சந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **39** | பொது கணக்குப் பிரிவு - தமிழ்நாடு மின்சார வாரியம் – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் இயங்கிவரும் மின்வாரிய உபயோகத்திலுள்ள கட்டிடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்து வசூலிப்பது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **40** | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண்.22- B11-காவல் நிலையம் மற்றும் வார்டு எண்.23 உள்ள ஆரோக்கியசாமிரோடு(மே) தமிழ்நாடு இசைக்கல்லூரிக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகை தொகையை குறைப்பது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **41** | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண்.24 D.B.ரோடு பகுதியில் உள்ள – தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலம் கட்டிடத்திற்கு 1.1.2013 முதல் பொதுப்பணித்துறை அரசுவழிகாட்டி மதிப்பீட்டின்படி வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **42** | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண்.22 பகுதியில் உள்ள - காமராஜபுரம் சமுதாயக்கூட கட்டிடத்தினை - தபால் துறை அலுவலகத்திற்கு ஒப்படைப்பது- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **43** | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வருடாந்திர குத்தகை இனங்கள் **31.03.2013–ல்** முடிவடைதல்**– 2013–2016**ம் ஆண்டிற்கு பொது ஏலம் மூலம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **44** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 5, 6, 7,8, 9 ஆகிய பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணியாளர்களை அமர்த்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **45** | பொறியியல் பிரிவு - 5 அபிவிருத்திப் பணிகள் (வார்டு எண்கள் 55, 70, 55, 28, 1) - மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்டது- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **46** | பொறியியல் பிரிவு - 5 அபிவிருத்திப் பணிகள் (வார்டு எண்கள் 25, 17, 18, 24, 23) - மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்டது- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **47** | பொறியியல் பிரிவு - 2 அபிவிருத்திப் பணிகள் (வார்டு எண்கள் 25, 52) - மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்டது- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ) <u>திருக்குறள்</u>**

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

**(குறள் - 380)**

**<u>விளக்கம்</u>**

சுற்றுப்புறச் சூழலைத் தமக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள மக்கள் ஓயாது முயல்வது இயல்பு. ஆயின் இயற்கையின் ஆற்றல் மிக வலிமையானது. அதுவே மேலோங்கி நிற்கும் என்பதை உணர வேண்டும்.

**திருவள்ளுவர்.**

---

**ஆ) <u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 1</u>**

தமிழகத்தில் சமீபகாலமாக நிலவிவரும் மின்சார தட்டுப்பாட்டை போக்குகின்ற உயரிய நோக்கத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சூரிய ஒளி சக்தியின் மூலமாக 3000 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்கான "தமிழ்நாடு சூரிய ஒளி ஆற்றல் கொள்கை''2012" என்ற மகத்தான திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதனைப் பின்பற்றி கோவை மாநகராட்சியிலும் மின்சார கட்டணத்தை குறைப்பதற்காக தெரு விளக்குகள், மற்றும் மாநகராட்சி அலுவலக கட்டிடங்களில் உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்தை சூரிய ஒளி சக்தியைக் கொண்டு உற்பத்தி செய்ய தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்க, விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) –யினை தயார் செய்து அத்திட்டத்திற்கு அனுமதி அளிக்குமாறு தமிழக அரசை கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் **<u>வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன்</u>** 62வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பாலன் அவர்களால் முன்மொழியப்பட்டு, 9 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ம.ராஜேந்திரன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 29.11.2012**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 2</u>**

கோவை மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள், மக்கள் பணியை சிறப்பாக ஆற்றவும், மக்களுடைய அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு மக்களிடம் கலந்து ஆலோசிக்கவும், பொதுமக்கள் மாமன்ற உறுப்பினரை எளிதாக சந்தித்து அவர்களின் குறைகளை தெரிவிக்க ஏதுவாகவும் அனைத்து வார்டுகளிலும் மாமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டித் தரவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் **<u>வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன்</u>** 9 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ம.ராஜேந்திரன் அவர்களால் முன்மொழியப்பட்டு 62வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பாலன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் : 29.11.2012**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**பொருள் எண் 1**

01.07.2007க்கு முன்னர் கட்டப்பட்ட அனுமதி இல்லாத கட்டிடங்கள், அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடங்கள் ஆகியவற்றை முறைப்படுத்த வீட்டு வசதி மற்றும் நகர்புற துறை மூலம் அரசாணை எண்.234, 235 நாள் 30.10.2012ல் வெளியிடப்பட்டு உள்ளது. அரசாணையில் உள்ள விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி விரபங்களை பொது மக்கள் அறியும் வகையில் தினசரி நாளிதழில் மற்றும் தொலைக்காட்சியில் விளம்பரம் செய்யவும், அரசாணையை பதிவு செய்யவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - விளம்பரம் செய்யவும், அரசாணையை பதிவு செய்யவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 13289/2012/ எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 260 நாள் : 29.11.2012</u>**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு பயன்படும் இவ்வரசாணையை வெளியிட ஆணை பிறப்பித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்தும், 1.7.11 ம் தேதிக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கும் இவ்வரசாணையின் பயன்கள் கிடைக்கும் வகையில் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட அரசை கேட்டுக் கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள் :- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கொசு ஒழிப்புப் பணிக்காக – அவசர அவசியத்தை முன்னிட்டு – தற்காலிகமாக 100 பணியாளர்களை 14.10.2012ம் தேதி முதல் மேலும் இரண்டு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தது – மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது - சம்பந்தமாக.

******

மாமன்ற தீர்மான எண். 61, நாள். 30.05.2012ன் படி கொசு ஒழிப்புப் பணியை தீவிரப்படுத்தவும், டெங்கு நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இரண்டு மாத காலத்திற்கு திரு. மயில்வாணன் ஒப்பந்ததாரர் மூலம், அன்னாருக்கு முன்பு வழங்கப்பட்ட தொகையின் அடிப்படையில் ஒரு பணியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.4983/- வீதம் ஒரு வார்டுக்கு இரண்டு பணியாளர்கள் வீதம் 200 பணியாளர்கள் 04.06.2012 முதல் 03.08.2012 முடிய பணிக்கு அமர்த்தி உத்தரவிடப்பட்டது. இதனால் இம்மாநகராட்சிப் பகுதிகளில் டெங்கு நோய் பரவாமல் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டது.

ஆனால் 04.08.2012 தேதியன்று இம்மாநகராட்சிப் பகுதியில் 3 நபர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. எனவே, மேலும் இந்நோய் மாநகராட்சிப் பகுதிகளில் பரவாமல் கட்டுப்படுத்தும் பொருட்டு பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி திரு.மயில்வாணன், ஒப்பந்ததாரர் மூலம் முன்பு வழங்கப்பட்ட தொகையின் அடிப்படையில், மேலும் 04.08.2012-ம் தேதி முதல் 15.08.2012ம் தேதி வரை 200 நபர்களையும், 16.08.2012 முதல் 30.09.2012 வரை 100 நபர்களையும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதலுடன் பணிநீட்டித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், தற்போது வடகிழக்கு பருவமழை ஆரம்பமாகியுள்ள நிலையில் டெங்கு நோய் மற்றும் கொசுக்களினால் பரவும் இதர நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டும் பெருமளவில் நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி திரு.மயில்வாணன், ஒப்பந்ததாரர் மூலம் ஒரு பணியாளருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.6,600/- வீதம் மேலும் 14.10.2012-ம் தேதி முதல் 2 மாத காலத்திற்கு 100 பணியாளர்களின் பணியை நீட்டித்து பணிக்கு அமர்த்தியதற்கும் மற்றும் இதற்கான செலவினம் ரூ.13,20,000/-க்கும் மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண்.4135/2012/எம்.இ.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 261 நாள் : 29.11.2012</u>**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்கள் களப்பணியை முடித்துவிட்டு வார்டு மாமன்ற உறுப்பினரின் கையொப்பம் பெற வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் :– உதவித்தொகை – கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித்தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – தொடர்பாக.

*************

கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் முதியோர் / விதவை உதவித்தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரணை செய்து 74 பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும், இவர்களுக்கு உதவித்தொகை வழங்கவும் வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் :–

| | |
|---|---|
| தகுதியுடையவர்கள் | 70 |
| மாநகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்டவர்கள் | 04 |
| **மொத்தம்** | **74** |

எனவே, வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத்திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்களின் பரிந்துரையினையேற்று, மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய மொத்தம் 74 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண். 9820/2012/எம்.இ.6

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 262 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 8493/12/ எம்.டி.2 | வார்டு எண்.1 துடியலூரில் ஏற்கனவே உள்ள மயானத்தில் வாயு பாதுகாப்பு அறை, ஃபர்னஸ், டிராலி, புகைப்போக்கி ஸ்க்ரப்பர் புனரமைத்தல் மற்றும் மின்மயானத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் | 45.50 | 20-09-12 முதல் அழைப்பு | 1.திரு. எ. அம்மாசையப்பன் கோயம்புத்தூர் 9.99% அதிகம்<br>2.திரு.ஆர். மயில்வாணன், கோயம்புத்தூர் 4.49% அதிகம் | திரு.ஆர். மயில்வாணன், கோயம்புத்தூர் 4.34% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண். 1-ல் உள்ள பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணி அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 8493/2012/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 263 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 5

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்ட பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 8950/12/ எம்.டி4 | வார்டு எண் 48ல் காந்திபுரம் 7 வது வீதி தொடர்ச்சி பாலம் முதல் சங்கனூர் சாலை வரை மறுதார் தளம் அமைத்தல் | 42.50 | 20.09.2012 முதல் அழைப்பு | 1.திருமதி. எம்.சரோஜினி கோயம்புத்தூர் 6.23% அதிகம்<br>2.திரு. கே.நடராஜன் கோயம்புத்தூர் 4.77 % அதிகம் | திரு. கே. நடராஜன் கோயம்புத்தூர் 3.25% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : வரிசை எண். 1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 8950/12/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 264 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 69க்குட்பட்ட சமுதாயக் கூடம்- மெர்சி ஹோம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு அளிப்பது – தொடர்பாக.

பார்வை மெர்சி ஹோம் நிறுவனத்தின் விண்ணப்ப நாள் 03.08.2012.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 69க்குட்பட்ட புலிய குளம் சமுதாயக் கூடம் நாள் ஒன்றுக்கு ரூ.530/- வாடகை அடிப்படையில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மெர்சி ஹோம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் தங்களது விண்ணப்பத்தில் எச்.ஐ.வி எய்ட்ஸ் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பராமரிப்புக்காக சமுதாயக்கூட கட்டிடத்தினை தங்கள் நிறுவனத்திற்கு வாடகை இல்லாமல் அளிக்குமாறு கேட்டுள்ளனர்.

எனவே மெர்சி ஹோம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு புலியகுளம் சமுதாயக் கூடத்தை குறைந்த மாத வாடகை நிர்ணயம் செய்து வழங்குவது தொடர்பாகவும், வாடகை நிர்ணயம் செய்வது குறித்தும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 96 நாள் 21.09.2012 ன்படி மாதம் ஒன்றுக்கு மாத வாடகை ரூ. 10,000/- நிர்ணயம் செய்து வழங்கலாம் என ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் பேரில் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண் 10881/2012/ கி.அ 11

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 265 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 96 நாள் 21.09.2012ல் மாத வாடகை ரூ. 10,000- என நிர்ணயம் செய்ததை, ரூ. 2500 (இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) என நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - ராமகிருஷ்ணாபுரம் வணிக வளாகக் கடை எண்- 1-க்கு 05.10.2012 ம் தேதியில் நடைபெற்ற பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்திற்கு பொருள் வைத்தல் - தொடர்பாக.

பார்வை - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 122 நாள். 22.10.2012.

----------------

கிழக்கு மண்டலத்திலுள்ள ராமகிருஷ்ணாபுரம் வணிக வளாகக் கடை மாத வாடகை இனங்களுக்கு மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ்க்காணுமாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன.

ராமகிருஷ்ணாபுரம் வணிகவளாகம் கடை எண் . 1

| வ.எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட அரசுமாத வாடகைத் தொகை | மாத வாடகை உச்ச கேள்வி | | உயர்ந்த பட்ச மாத வாடகைத் தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத்தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 1. | திரு. கலீல் ரஹ்மான் | 6125/- | … | 9,900 | … |
| 2. | திரு. இஸ்மத்துல்லா | | … | 12,112 | 12,112 |

எனவே ராமகிருஷ்ணாபுரம் வணிக வளாக கடை எண் 1- க்கு உயர்ந்த பட்ச ஏலத்தொகை ரூ. 12,112/- க்கு கோரியுள்ள ஏலதாரர் திரு. இஸ்மத்துல்லா என்பவருக்கு மேற்காணும் மாதாந்திர வாடகை உரிமையினத்தை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 122, நாள் - 22.10.2012-ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் பேரில் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று கடை ஒப்படைப்பு செய்ய அனுமதி அளிக்கப்பட்டதை ஏற்று பின்னேற்பு வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 864 /2012/ கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 266 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 122 நாள் 22.10.2012 ன் தீர்மானத்தின் பரிந்துரைக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதிக்கு பின்னேற்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் விளாங்குறிச்சி ரோடு வணிக வளாக கடைகளின் ஏலக் கோரிக்கைகளை ஏற்பது- தொடர்பாக

பார்வை : 1.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 126 நாள் 22.10.2012
2.வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் 31.10.2012

*****

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 3ல் சுப்பிரமணியம்பாளையம் கடை எண் 1 மற்றும் வார்டு எண் 31 ல் விளாங்குறிச்சி ரோடு வணிக வளாகம் கடை எண் 3, 4, 5 மற்றும் 6 ஆகிய கடைகளுக்கு ஒப்படை செய்யும் நாள் முதல் 31.03.2015 வரையிலான மூன்றாண்டுகளுக்கு உரிமம் ஒப்படை செய்வதற்கு 20.06.2012, 25.07.2012, மற்றும் 31.08.2012 ஆகிய தேதிகளில் பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது. இக்கடைகளுக்கு மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.10.2012 தேதியில் நடத்தப்பட்டது. இதில் விளாங்குறிச்சி ரோடு வணிக வளாக கடைகளுக்கு மட்டும் ஏல வைப்பு தொகைகள் செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். சுப்பிரமணியம்பளையம் வணிக வளாக கடைக்கு ஒருவரும் ஏல வைப்பு தொகைகள் செலுத்தமுன்வரவில்லை. மேற்படி ஏல தினத்தன்று கீழ் குறிப்பிட்டுள்ள விபரப்படி ஏலக்கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

விளாங்குறிச்சி ரோடு வணிக வளாகம்

கடை எண் 3 அரசு மதிப்பு மாதம் ஒன்றுக்கு ரூ 9200/-(கடையின் அளவு 452 சதுரடி)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 31.08.2012 ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | 05.10.2012 ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | |
|---|---|---|---|---|
| | | | மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
| 1 | திரு.தங்கராஜ் | - | - | 10000/- |
| 2 | திரு.என். செந்தில் குமார் | 15001/- | - | 13500/- |

கடை எண் 4 அரசு மதிப்பு மாதம் ஒன்றுக்கு ரூ 4000/- (கடையின் அளவு 183 சதுரடி)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 31.08.2012 ம்தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | 05.10.2012 ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | |
|---|---|---|---|---|
| | | | மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
| 1 | திரு.எஸ்.பி. கார்த்திகேயன் | - | - | 9500/- |
| 2 | திரு.சபரிவிக்னேஷ் | - | - | 7120/- |

கடை எண் 5 அரசு மதிப்பு மாதம் ஒன்றுக்கு ரூ 4000/-(கடையின் அளவு 183 சதுரடி)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 31.08.2012ம்மே ததிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | 05.10.2012 ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | |
|---|---|---|---|---|
| | | | மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
| 1 | திரு.எஸ்.கிட்டுசாமி | - | - | 9300/- |

கடை எண் 6 அரசு மதிப்பு மாதம் ஒன்றுக்கு ரூ 4000/- (கடையின் அளவு 183 சதுரடி)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 31.08.2012ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | 05.10.2012 ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | |
|---|---|---|---|---|
| | | | மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
| 1 | திருமதி.எஸ்.சங்கிதா | - | - | 9000/- |
| 2 | திரு.டி.தங்கராஜ் | - | - | 8100/- |

விளாங்குறிச்சி ரோடு வணிகவளாகம் கடை எண் 3க்கு 31.08.2012ம் தேதிய மின் ஏலத்தில் பெறப்பட்டுள்ள தொகையினை காட்டிலும் குறைவாகவே ஏலத்தொகை பெறப்பட்டுள்ளதால் இக்கடைக்கு மறு ஏலம் கோரவும் மேலும் கடைஎண் 4, 5 மற்றும் 6 ஆகிய கடைகளுக்கு 25.07.2012 தேதிய ஏலத்தொகையினை காட்டிலும் கூடுதலாக ஏலம் கோரிக்கை பெறப்பட்டுள்ளதால் இவ் ஏலக்கோரிக்கைகளை ஏற்று உரிமம் ஒப்படை செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 126 நாள் 22.10.2012 ல் மாமன்றத்தில் பரிந்துரை செய்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையிலும் பொருளின் அவசர அவசியத்தை கருதியும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி கடைகளின் உரிமம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் பின்னேற்புக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 6508/2012/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 267 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 126 நாள் 22.10.2012 ன் தீர்மானத்தின் பரிந்துரைக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதிக்கு பின்னேற்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

பார்வை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 128 நாள் 22.10.2012

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 05.10.2012-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

வரிசை எண்.1

இதில் கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை.

| வ. எண் | மாதவாடகை கடைகள் | அரசாங்க மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| அ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் கடைகள்<br>காய்கறி கடைகள் - 4<br>(கடைஎண்கள்.28,46, 47 மற்றும் 95) | 950/- |
| ஆ | சக்திரோடு ஆடு அறுவைமனை அருகிலுள்ள ஆட்டிறைச்சி கடைகள்<br>கடை எண். 3. | 3,000/- |
| இ | ஒப்பணக்கார வீதியில் உள்ள மாநகராட்சி பள்ளி எதிரிலுள்ள மாநகராட்சி வணிக வளாக கடை எண். 8 | 11,550/- |
| ஈ | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தளம் எண்.1-ல் கடை எண்.4. | 11,103/- |
| ஊ | காந்திபுரம் நகர பேருந்து நிலைய வணிக வளாக கடைகள் மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. (ஆர்.வீ.ஹோட்டல் எதிரில்) கடை எண்.4 (32.50 சதுரடி) | 2,011/- |

வரிசை எண்.2

| | இனம் | 05.10.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| அ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் கடைகள்<br>மாமிச கடைகள் (9 கடைகள்)<br>கடைஎண். 8,9,10,11,12,13,14,15 மற்றும் 16 (தற்போது உள்ள நிலையில்)<br>(அரசு மதிப்பு ரூ. 950/-) | 975/-<br>(ஒப்பந்தப்புள்ளி) | திருமதி.I.பாலாமணி லோகநாத் |

மேற்படி இனத்திற்கு 20.06.2012, 25.07.12 மற்றும் 31.08.12, ஆகிய தேதிகளில் மூன்று முறை மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. ஒருவரும் ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை.

05.10.2012-ம் அன்று நடைபெற்ற ஏலத்தில் மேற்கண்ட ஒன்பது கடைகளையும் தற்போது உள்ள நிலையில் எடுத்துக்கொள்ள அரசுமதிப்பு ரூ.950/-ஐ காட்டிலும் கூடுதலாக ரூ.975/-க்கு திருமதி.I.பாலாமணி லோகநாத் என்பவரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி கடைகளை ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண்.3

| வ. எண் | இனம் | 05.10.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| அ | ஆம்னி பேருந்து நிலையத்தில் ராதாகிருஷ்ண ரோடு வணிக வளாகத்தில் அமைந்துள்ள இடத்தில் 117.10ச.மீ அளவுள்ள சிற்றுண்டி அறை.<br>(அரசு மதிப்பு ரூ .83,500/-) | 45,000/-<br>(ஒப்பந்தப்புள்ளி) | திரு.N.செந்தில்குமார் |

மேற்படி இனத்திற்கு 11.04.2012, 25.04.2012, 10.05.2012 மற்றும் 20.06.2012-ல் மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. அனைத்து ஏலக்கோரிக்கைகளும் அரசு மதிப்பைக்காட்டிலும் குறைவாகவே பெறப்பட்டது. 31.08.2012 நடை பெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

05.10.2012-ம் அன்று நடைபெற்ற ஏலத்தில் அரசுமதிப்பு ரூ.83,500/-ஐ காட்டிலும் குறைவாகவே ரூ.45,000/-க்கு திரு.N.செந்தில்குமார் என்பவரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. தொடர்ந்து நடைபெற்ற மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஏலக்கோரிக்கை அனைத்தும் அரசு மதிப்பைக்காட்டிலும் குறைவாகவே பெறப்பட்டது.

மாநகராட்சிக்கு ஏற்படும் தொடர் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி இனத்தை ஒதுக்கீடு செய்வது குறித்து அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண்.4

| வ. எண | இனம் | 05.10.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| அ | சக்திரோடு ஆடு அறுவைமனை அருகிலுள்ள பொது உபயோக கடைகள் கடை எண்.1 (அரசு மதிப்பு ரூ. 3,000/-) | 3,300/- (ஒப்பந்தப்புள்ளி) | திரு.M.ஜெயபிரகாஷ். |
| ஆ | சக்திரோடு ஆடு அறுவைமனை அருகிலுள்ள பொது உபயோக கடைகள் கடை எண்.2. (அரசு மதிப்பு ரூ.3,000/-) | 3,350/- (ஒப்பந்தப்புள்ளி) | திரு.N.மணிகண்டன் |

மேற்படி இனத்திற்கு கடை எண். 1 மற்றும் 2-க்கு அரசுமதிப்பை காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. ஆட்டு இறைச்சிக்கடையிலிருந்து பொது உபயோக கடையாக பயன்படுத்தலாம் என மாமன்றத்தில் தீர்மானித்து முதல் முறை ஏலம் கோரியதில் மேற்படி கடைகளுக்கு மறு ஏலம் கோரலாம்.

வரிசைஎண்.5

| வ. எண். | இனம் | 05.10.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| அ | திரு.வி.க.மார்க்கெட்கடைகள் கடைஎண். 17 மற்றும் 18 (அரசு மதிப்பு ரூ.2,100/- கடை ஒன்றுக்கு ) | 1,300/- (ஒப்பந்தப்புள்ளி கடை ஒன்றுக்கு | திரு.C.B.செந்தில் குமார் |
| ஆ | திரு.வி.க.மார்க்கெட்கடைகள் கடைஎண். 1 மற்றும் 2 (அரசு மதிப்பு ரூ.2,846/-) | 1,300/- (ஒப்பந்தப்புள்ளி கடை ஒன்றுக்கு | திரு.C.B.செந்தில் குமார் |

(அ) இனத்திற்கு 10.05.12 20.06.2012, 25.07.12 மற்றும் 31.08.12, ஆகிய தேதிகளில் நான்கு முறை மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. ஒருவரும் ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை.

(ஆ) இனத்திற்கு 31.08.12, தேதியில் மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. ஒருவரும் ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை.

05.10.2012-ம் அன்று நடைபெற்ற ஏலத்தில் (அ)இனத்திற்கு அரசுமதிப்பு ரூ.2,100/-ஐ காட்டிலும் குறைவாகவே ரூ.1,300/-க்கு திரு.C.B.செந்தில் குமார் என்பவரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

(ஆ) இனத்திற்கு அரசுமதிப்பு ரூ.2,486/-ஐ காட்டிலும் குறைவாகவே ரூ.1,300/-க்கு திரு.C.B.செந்தில் குமார் என்பவரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. தொடர்ந்து நடைபெற்ற மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. மாநகராட்சிக்கு ஏற்படும் தொடர் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு திரு.வி.க மார்க்கெட்டியில் உள்ள கடை எண்.10,11, 23 மற்றும் 24 மாமன்ற தீர்மான எண்.191 நாள்.16.08.2012-ல் ரூ,1300/- க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் மாநகராட்சிக்கு ஏற்படும் தொடர் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி கடைகளை ஒதுக்கீடு செய்வது குறித்து அனுமதி வேண்டப்படுகிறது.

| இனம் | 31.08.12-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 05.10.12-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| டாக்டர் நஞ்சப்பாரோடு வணிக வளாக கடை எண்.18. (அரசு மதிப்பு ரூ.27,777/-) | ரூ.13,750/- திரு.J.மனோகரன் | ரூ.13,750/- திரு.J.M.சசிவர்ணன் |

வரிசை எண்.6

மேற்படி இனத்திற்கு கடை எண்.18 -க்கு இரண்டாவது முறை நடைபெற்ற ஏலத்தில் அரசுமதிப்பு ரூ.27,777/-ஐ காட்டிலும் குறைவாக ரூ.13,750/-க்கு திரு.J.M.சசிவா்ணன் அவா்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தை மறு ஏலம் கோரலாம்.

வரிசை எண்.7

| வ. எண். | இனம் | 05.10.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயா்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரா் பெயா் |
|---|---|---|---|
| அ | வாா்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில், உள்ள வணிக வளாக கடை எண்.1 (226.04சதுரடி) (அரசு மதிப்பு ரூ.6,500/- கடை ஒன்றுக்கு ) | 7,200/- (ஒப்பந்தப்புள்ளி கடை ஒன்றுக்கு) | திரு.R.மணிகண்டன் |
| ஆ | வாா்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில், உள்ள வணிக வளாக கடை எண்.3 (339.07சதுரடி) (அரசு மதிப்பு ரூ.9,500/- கடை ஒன்றுக்கு ) | 15,030/- (ஒப்பந்தப்புள்ளி கடை ஒன்றுக்கு) | திரு.D.சிவக்குமாா் |
| இ | வாா்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில், உள்ள வணிக வளாக கடை எண்.4 (339.07சதுரடி) (அரசு மதிப்பு ரூ.9,500/- கடை ஒன்றுக்கு ) | 16,106/- (ஒப்பந்தப்புள்ளி கடை ஒன்றுக்கு) | திரு.R.ராஜேந்தா் |
| ஈ | வாா்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில், உள்ள வணிக வளாக கடை எண்.5 (339.07சதுரடி) (அரசு மதிப்பு ரூ.9,500/- கடை ஒன்றுக்கு ) | 16,600/- (ஒப்பந்தப்புள்ளி கடை ஒன்றுக்கு) | திரு.K.சொா்ணலிங்கம் |

வரிசை எண்,7-ல் உள்ள அ முதல் ஈ வரை உள்ள கடைகளுக்கு அரசு மதிப்பைக்காட்டிலும் கூடுதலாக மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இது முதல் முறை ஏலம் என்பதால் இவ்வினங்களுக்கு மறு ஏலம் கோரலாம்.

வரிசை எண்.8

| மாதவாடகை கடை | அரசாங்க மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|
| காந்திபுரம் நகர பேருந்து நிலைய வணிக வளாக கடைகள் மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. (ஆா்.வீ.ஹோட்டல் எதிரில்) கடை எண்.5(29.25 சதுரடி) | 1,810/- |

மேற்படி இனத்திற்கு 05.10.2012-ம் தேதிய முதல் ஏலத்தில் திரு.T..அம்சவேனி மட்டுமே கலந்து கொண்டாா். அவரிமிருந்து மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ரூ.320/-க்கு பெறப்பட்டது. இது அரசு மதிப்பை காட்டிலும் குறைவாக உள்ளது. எனவே இவ்வினத்திற்கு மறு ஏலம் கோரலாம்.

வரிசை எண்.9

| வ. எண். | இனம் | 05.10.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயா்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரா் பெயா் |
|---|---|---|---|
| அ | மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமாா்க்கெட் அருகில் தரை தளத்தில் உள்ள கடை எண். 3(153சதுரடி) (அரசு மதிப்பு ரூ.60,000/- கடை ஒன்றுக்கு ) | 72,200/- (ஒப்பந்தப்புள்ளி கடை ஒன்றுக்கு | திரு.A.பவானி சிங் |
| ஆ | மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமாா்க்கெட் அருகில் முதல் தளத்தில் உள்ள கடை எண். 6(153சதுரடி) (அரசு மதிப்பு ரூ.15,000/- கடை ஒன்றுக்கு ) | 17,100/- (ஒப்பந்தப்புள்ளி | திரு.I.சலீம் |

வரிசை எண்,9-ல் உள்ள கடைகளுக்கு மாமன்ற தீா்மான எண்.14, நாள்.27.04.12-ல் கடை எண்.3 திரு.N,சீனிவாசன் என்பவருக்கு ரூ.60,000/- மாதவாடகைக்கும் கடை எண்.6 திரு.R.சுப்பரமணியம் என்பவருக்கு ரூ.15,000/- மாதவாடகைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி ஏலதாரா்கள் ஏலத்தொகை செலுத்தி கடையை பெறுப்பு ஏற்காததால் ஆணையாளா் அவா்களின் 25.09.2012 மற்றும் 01.10.2012-தேதிய உத்திரவுபடியும் அவா்கள் செலுத்திய ஏலத்தொகை ரூ.2,00,000/-யை (கடை ஒன்றுக்கு ரூ.1,00,000/-வீதம் செலுத்தியது) மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருவாய் இழப்பினை தவிா்க்கும் பொருட்டு கடை எண்.3 மற்றும் 6-ஐ 05.10.2012 அன்று மறு ஏலம் கோரியதில் அரசு மதிப்பைக்காட்டிலும் கூடுதலாக மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி முன் அனுமதிக்கு பின்னேற்பு வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண். 1,3,6,7 மற்றும் 8ல் உள்ள இனங்களுக்கு மறு ஏலம் கோர தீர்மானிக்கப்பட்டது.

வரிசை எண். 2,5 மற்றும் 9–ல் உள்ள இனங்களுக்கு உயர்ந்த பட்ச ஏலக் கோரிக்கையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்தில் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது

வரிசை எண். 4ல் உள்ள இனத்திற்கு உயர்ந்த பட்ச ஏலக் கோரிக்கையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்தில் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

வரிசை எண்.9 –ல் (அ மற்றும் ஆ) ஏற்பளிக்கலாம்.

மேற்படி இனங்களுக்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு கூட்டத்தாள் அனுமதி பொருள் பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் பார்வையில் காணும் தீர்மானத்தின்படி மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 128 நாள் 22.10.2012ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும்பொருட்டு கீழ்கண்ட இனங்களை 01.11.2012 முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கு முன் அனுமதி பெறப்பட்டதை பின்னேற்பு வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

1. வ.எண்.2-ல் - 9 கடைகளுக்கு ரூ975/-வீதம் திருமதி.ட.பாலாமணி லோகநாத் என்பவருக்கு ஒப்படைக்கலாம்
2.. வ.எண்.5-ல் - கடை எண். 1,2,17 மற்றும் 18-ஐ திரு.C.B.செந்தில் குமார் என்பவருக்கு – தலா ரூ.1300/- வீதம் 01.11.2012 முதல் ஒப்படைக்கலாம்.
3. வ.எண்..4-ல் - கடை எண்.1க்கு திரு.M.ஜெயபிரகாஷ் என்பவருக்கு ரூ.3300/-மற்றும் கடை எண்.2க்கு திரு.N.மணிகண்டன் என்பவருக்கு ரூ.3350/- வீதம் 01.11.2012 முதல் ஒப்படைக்கலாம்.
4.. வ.எண்.9-ல் கடை எண்.3-க்கு திரு.Aபவானி சிங் என்பவருக்கு ரூ,72,200/-மற்றும் கடை எண்.6க்கு திரு.I.சலீம் என்பவருக்கு ரூ.17,100/- வீதம் 01.11.2012 முதல் ஒப்படைக்கலாம்.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/10/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 268 நாள் : 29.11.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 128 நாள் 22.10.2012 ன் தீர்மானத்தின் பரிந்துரைக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதிக்கு பின்னேற்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் -வார்டு எண்.18-க்கு உட்பட்ட ஓம் கணேஷ் நகரில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாயகூட கட்டிடம் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதை ஏற்பது – தொடர்பாக.

பார்வை- 1. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.124 நாள்.22.10.12
2.வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி நாள்.31.10.12

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.18, உட்பட்ட ஓம்கணேஷ் நகரில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாயகூட கட்டிடம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. மேற்படி இடத்திற்கு பொதுப்பணித்துறையின் ஒரு சதுரடி மதிப்பு ரூ.39.59 (39.59 x 1897 = ரூ.75102/-) ஒரு மாதத்திற்கு ஆகும்.

எனவே சமுதாய கூடத்தை மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கவும், வைப்புத்தொகை நிர்ணயம் செய்யவும், சேவை வரி வசூலிக்கவும் மற்றும் நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2500/- என நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுற்கு பொருள் சமார்ப்பிக்கப்பட்டதில் தனது தீர்மான எண்.124 நாள்.22.10.2012-ல் வைப்புத்தொகை நிர்ணயம் செய்யவும், சேவை வரி வசூலிக்கவும் மற்றும் நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/- என நிர்ணயம் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையிலும் பொருளின் அவசர அவசியத்தை கருதியும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி சமுதாய கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் பின்னேற்புக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 9753 / 2012 / அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 269 நாள் : 29.11.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 124 நாள் 22.10.2012 ன் தீர்மானத்தின் பரிந்துரைக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதிக்கு பின்னேற்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

பொருள் - வருவாய் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் - மாநகராட்சி கட்டிடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வாடகை உயர்வு செய்ததை ஏற்பது தொடர்பாக.

பார்வை -
1. அரசாணை எண்.147 நாள்.30.02.2000.
2. அரசாணை எண்.92 நாள்.03.07.2007.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.123 நாள்.22.10.12
4.வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி நாள்.31.10.12

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி கட்டிடங்களில் அமைந்துள்ள 34 அங்கன்வாடி மையங்களுக்கு மாதாந்திர வாடகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. பார்வையில் காணும் அரசாணையின்படி 9 ஆண்டுகளுக்கு மேல் உள்ள அனைத்து வரியில்லா இனங்களுக்கும் வாடகை உயர்வு செய்ய வேண்டியுள்ளது.

எனவே அரசாணையின்படி மாநகராட்சி மேற்கு மண்டல பகுதியில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையங்களுக்கு மாதாந்திர வாடகையாக ரூ.100/- வசூல் செய்யப்படுவதை ரூ.300/- ஆக உயர்த்தி வசூல் செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.123 நாள்.22.10.2012-ன் படி தீர்மானிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையிலும் பொருளின் அவசர அவசியத்தை கருதியும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி அங்கன்வாடி மையங்களுக்கு வாடகை உயர்வு செய்து வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் பின்னேற்ப்புக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.10981/2012/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 270 நாள் : 29.11.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 123 நாள் 22.10.2012 ன் தீர்மானத்தின் பரிந்துரைக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதிக்கு பின்னேற்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 10ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு பாட வாரியாக வினா வங்கி அச்சிட்டு வழங்குதல் - சார்பாக.

----------------

மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 10ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பாடவாரியாக வினா வங்கி (Question Bank) அச்சிட்டு வழங்கவும், அதற்கென தோராயமாக ரூ.9.5 லட்சம், மாநகராட்சி ஆரம்பக் கல்வி நிதியிலிருந்து செலவிடவும் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். எண். 2577/2012/ கே. 6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 271 நாள் : 29.11.2012</u>**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் 48 க்குட்பட்ட கணேஷ் நகர் மற்றும் காந்திபுரம் 5 வது வீதியினை இணைக்கும் வகையில் சங்கனூர் பள்ளத்தின் குறுக்காக பாலம் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 64,50,000-க்கு பணி ஒப்புதல் பெறப்பட்டு பணி துவங்கப்பட்டுள்ளது. மேற்படி பாலம் கட்டும் பகுதியில் குடியிருந்து வந்த கீழ்காணும் குடியிருப்புதாரர்கள், பாலம் கட்டும் பகுதியிலிருந்து குடியிருப்புகளை காலி செய்ய அறிவுறுத்தப்பட்டு தங்களது குடியிருப்புகளை பாலம் கட்ட ஏதுவாக உடனடியாக காலி செய்துள்ளார்கள்.

| வ.எண் | பெயர் |
|---|---|
| 1 | திரு. ஜி.மகேஷ், த/பெ. கோவிந்தன் |
| 2 | திருமதி. அண்ணக்கிளி, க/பெ. கண்ணன் |
| 3 | திருமதி. சகுந்தலா, க/பெ. பொன்ராஜ் |
| 4 | திரு. தங்கராஜ், த/பெ. துரைசாமி |
| 5 | திருமதி. மேரி, க/பெ. பாபு |
| 6 | திருமதி. செல்லம்மாள், க/பெ. ராஜகோபால் |

எனவே வீடுகளை இழந்துள்ள இவர்கள் குடியிருக்க ஏதுவாக Jnnurm BSUP திட்டத்தின்கீழ் குடிசை மாற்று வாரியத்தினரால் கட்டப்பட்டுள்ள வீடுகளில் (6) ஆறு வீடுகளை ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மாமன்றம் முடிவு செய்ய                    ந.க.எண் 10156/12/டி1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 272 நாள் : 29.11.2012</u>**

பொருளில் குறிப்பிட்டுள்ள 6 நபர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

**பொருள்: –** கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண்.24 சாஸ்திரி மைதானத்தை வேறு நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்குவதை தவிர்த்து சிறுவர்கள், மாணவ மாணவிகள் விளையாடுவதற்கு பயன்படுத்தி கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைப்பது – தொடர்பாக.

––––

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.24 சாஸ்திரி மைதானத்தில் பல் வேறு நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன. இதன் மூலம் மாநகராட்சிக்கு கிடைக்கும் வருமானம் மிகவும் குறைவாக உள்ளது. இம்மைதானத்தை சிறுவர்கள், மாணவ மாணவிகள் அனைவரும் விளையாடுவதற்கு தற்சமயம் பயன்படுத்தி வருகின்றனர். விளையாட்டு மேம்பாட்டினை கருத்தில் கொண்டு இம்மைதானத்தை வேறு நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்குவதை தவிர்த்து சிறுவர்கள், மாணவ மாணவிகள் விளையாடுவதற்கு மட்டும் பயன்படுத்தி கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்                    ந.க.எண்.7611/12/டி1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 273 நாள் : 29.11.2012</u>**

பொருள் ஒத்திவைக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 23-ல் உள்ள மாநகராட்சி கலையரங்கில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தினரால் கடந்த 28.09.2012 முதல் 30.8.2012 முடிய மூன்று தினங்கள் தமிழக அரசு சார்பில் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு வாடகைத் தொகையாக காசோலை ரூ. 59,750- க்கு ஸ்டேட் பேங்க் ஆப் திருவாங்கூர், கோயம்புத்தூர் கிளை, எண் 208993 நாள் 28.09.2012 ல் பெற்று மேற்கு மண்டல கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிகழ்ச்சியானது மாநகராட்சி சார்பு அரசு விழா என்பதால் செலுத்தப்பட்ட வாடகைத் தொகையினை தள்ளுபடி செய்து இலவசமாக வழங்கியதற்கும் செலுத்தப்பட்ட தொகையினை பதிவேடுகளில் மற்றும் அலுவலகப் பதிவேடுகளில் ரத்து செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 10824/2012/ டி 2 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 274 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 16**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம் - வார்டு எண்.71-ல் 6322.16 சதுரடியிலுள்ள புலியகுளம் திருமண மண்டபத்தை பொது ஏலம் மூலம் தனியார் பராமரிப்புக்கு ஒதுக்கீடு செய்யவும், ஏலதாரர் செலுத்த வேண்டிய வைப்பு தொகை மற்றும் இதர கட்டணங்கள் நிர்ணயம் செய்து ஏல நிபந்தனைகளுக்கு ஒப்புதல் பெறுவது - தொடர்பாக.

**பார்வை:** வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 127 நாள் 22.10.2012

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.71-ல் 6322.16 சதுரடியிலுள்ள புலியகுளம் திருமண மண்டபத்தை பொது ஏலம் மூலம் மூன்று வருட காலத்திற்கு தனியார் பராமரிப்புக்கு ஒதுக்கீடு செய்யவும், ஏலதாரர் செலுத்த வேண்டிய வைப்பு தொகை மற்றும் ஏல நிபந்தனைகளை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்திட அனுமதி வேண்டி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| வைப்புத் தொகை ரூ. | காப்புத் தொகை ரூ. | வங்கி உறுதிச் சான்றிதழ் மதிப்பு ரூ. | வங்கி உறுதிச் சான்று மதிப்பிற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|
| 2,00,000 | 1,00,000 | 5,00,000 | 2,00,000 |

பொதுப்பணித்துறை வாடகை மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் குறிப்பு கோரப்பட்டதில் சதுரடிக்கு ரூ.27.85/- என மொத்தம் 6322.16 சதுரடிக்கு ரூ.1,76,075/-க்கு பொதுப்பணித்துறை மாத வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒரு வருடத்திற்கு அரசாங்க மதிப்பாக ரூ 21,12,900/- நிர்ணயம் செய்யவும், 24 மணி நேரத்திற்கு ரூ.36,000/-ம் 12 மணி நேரத்திற்கு ரூ.18000/-ம், ஆறு மணி நேரத்திற்கு 9000/- எனவும் நிர்ணயம் செய்யலாம். இரண்டு மற்றும் மூன்றாம் வருடங்களில் முந்தையாண்டு ஏலத்தொகையில் ஐந்து சதவீதம் உயர்வு செய்து செலுத்தும் படியும் நிர்ணயம் செய்யலாம்.

சிறப்பு ஏல நிபந்தனைகள்

1. மண்டபத்தில் வெளியேயுள்ள பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் ஒலி பெருக்கி உபயோகிக்க அனுமதிக்கக்கூடாது. கட்டிடத்திற்குள் ஒலிபெருக்கி அனுமதிக்க காவல்துறையின் அனுமதியை பெற வேண்டியது மனுதாரரின் பொறுப்பாகும்.

2. திருமண மண்டபத்திற்குண்டான மின்சார செலவினை ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும்.

3. ஆழ்குழாய் கிணறு மோட்டார் மற்றும் மின் பழுதுகளை உடனுக்குடன் ஒப்பந்ததாரரே சரி செய்து நல்ல முறையில் பராமரிக்கவேண்டும்.

4. திருமண மண்டபத்தை ஆண்டுதோறும் தற்போது ஒப்படைக்கின்ற நிலையில் கதவு சன்னல்களுக்கு வர்ணம் பூசியும், நல்ல முறையில் பராமரிப்பு செய்வதோடு இதற்காகும் செலவுகளை ஒப்பந்ததாரரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

5. திருமண மண்டபத்திற்கு சமையல் செய்வதற்கு தேவையான அனைத்து பொருட்களையும் ஒப்பந்ததாரர்களே தனது சொந்த செலவில் வாங்கி உபயோகப்படுத்த வேண்டும்.

6. சமையலறையில் உபயோகப்படுத்துகின்ற கேஸ் சிலிண்டர், சமையல் பாத்திரங்கள், மண்டபத்தில் அமர்வதற்குண்டான நாற்காலிகளையும், திருமண மண்டபத்தில் டைனிங் மற்றும் அதற்குண்டான நாற்காலிகளையும் தனது சொந்த செலவிலேயே தேவையான அளவு வாங்கி உபயோகப்படுத்த வேண்டும். இதற்குண்டான கட்டணங்களை (தற்போது வெளியிடங்களில் வசூலிக்கப்படும் தொகைகளுக்கு மிகாமல்) மண்டபத்தின் முகப்பில் அறிவிப்புப் பலகையில் பொது மக்களுக்குத் தெரியும் வகையில் வைக்கப்படவேண்டும்.

7. தளவாடங்கள் மீது குத்தகைதாரர் அதிக கட்டணம் வசூலிப்பதாக பொதுமக்கள் கருதும் பட்சத்தில் வெளியிடங்களில் இருந்து பொது மக்கள் கொண்டு வந்து பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படவேண்டும்.

8. திருமண காரியங்களுக்கு உபயோகப்படுத்துகின்ற மின்சாரத்திற்கு மாநகராட்சி நிர்ணயித்த கட்டணத்திற்கு கூடுதலாக கட்டணம் வசூல் செய்யக்கூடாது, மற்றும் மின் விளக்குகள் கூடுதலாக உபயோகப்பதற்கு மின்சார இலாகாவிற்கு விண்ணப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

9. மண்டப பகுதிகளில் பிளாஸ்டிக் பை, டம்ளர் போன்றவைகளை எக்காரணம் கொண்டும் உபயோகிக்கக்கூடாது. மேலும் மண்டபத்திற்கு வரும் பொது மக்களையும், மேற்படி பிளாஸ்டிக் பொருட்களை கொண்டு வருவதைத் தடுக்க வேண்டும். இதற்கான அறிவிப்பு பலகைகள் உரிய இடத்தில் வைக்கப்படல் வேண்டும்.

10. உரிமதாரர் மண்டப பகுதிகளில் குவியும் குப்பைகளை குப்பைகூடையில் வைத்துக் கொட்டவும், அவற்றினை அகற்றவும் தனது சொந்த செலவில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

11. பயன்படுத்துவோர் தரைதளம் (Floor), சன்னல், கதவு மற்றும் மண்டபத்தில் உள்ள மாநகராட்சியின் பொருட்களுக்கு சேதம் ஏதும் ஏற்பட்டால் அதை ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சரி செய்து கொடுக்கவேண்டும்.

12. மாநகராட்சி அதிகாரிகள் திடீர் ஆய்வின் போது நிபந்தனைகளுக்குட்பட்டு இயங்கவில்லை என கண்டறிந்தாலோ அல்லது வசூலில் முறைகேடு ஏதும் காணப்பட்டாலோ உரிமம் ரத்து செய்ய மாநகராட்சிக்கு முழு அதிகாரம் உண்டு.

13. திருமண மண்டபத்திற்கு ஓராண்டு உரிமகாலம் முடிவுறும் 60 தினங்களுக்கு முன்பாகவே அடுத்த ஆண்டிற்கான ஒரு வருட உரிமக்கட்டணம் முழுதும் செலுத்தப்பட வேண்டும்.

14. ஒருநாள் என்பது மதியம் 2.00 மணி முதல் மறுநாள் மதியம் 2.00 மணிவரை (24 மணி நேரம் என்பதாகும்.

15. அரைநாள் என்பது காலை 6.00 மணிமுதல் மதியம் 2.00 மணிவரை மற்றும் மதியம் 2.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை என்பதாகும்.

16. அதிகப்படியான நேரத்திற்குட்பட்ட காலங்கள் அரை நாள் என்று கணக்கில் கொள்ளப்படும்.

17. ஏலத்திற்குரிய காப்புத் தொகை, டேவணித்தொகை போன்றவை அவ்வப்போது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்படும்.

18. காப்புத் தொகை குத்தகை காலம் முடிந்து தணிக்கை முடிவு பெற்ற பின்னர் வழங்கப்படும்.

19. பொது ஏல நிபந்தனைகள் இதற்கு பொருந்தும்.

20. கட்டிடத்தை உபயோகிப்பது சம்பந்தமாக மாநகராட்சி ஆணையாளரால் அவ்வப்போது அளிக்கப்படும் உத்திரவுகளுக்கும் அறிவுரைகளுக்கும் கட்டுப்படவேண்டும்.

21. எந்தவித முன்னறிவிப்புமின்றி எந்த நேரத்திலும் அனுமதியை ரத்து செய்வதற்கு மாநகராட்சி ஆணையாளருக்கு முழு உரிமை உண்டு.

22. மேலே கண்டுள்ள நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு வசூல் செய்யும் அனுமதியை செயல்படுத்த புகைப்படம் ஒட்டிய ரூ100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் எழுதி கையொப்பம் இட்டுத்தரவேண்டும்.

கூடுதல் நிபந்தனைகள்

- ❖ மாநகராட்சி பணியாளர்களுக்கு சலுகை அடிப்படையில் நிர்ணயிக்கும் வாடகையில் பாதி வாடகையை வசூலிக்கலாம்.
- ❖ மத்திய மற்றும் மாநில அரசுகளால் விதிக்கப்படும் வரிகள் செலுத்தப்பட வேண்டும்.

பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய காப்புத்தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ்/ வங்கி உறுதி சான்றிதழ் அதற்கு ஈடாக செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் மற்றும் திருமணமண்டபத்திற்கு மேற்குறிப்பிட்ட நாள் வாடகையினை நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 127 நாள் 22.10.2012ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.8800 /12/அ9(ம)

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 275 நாள் : 29.11.2012</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 127 நாள் 22.10.2012 ல் நிர்ணயித்த வாடகைத் தொகைக்கு பதிலாக ஒரு நாளைக்கு (24 மணி நேரத்திற்கு ) ரூ. 15000 (பதினைந்து ஆயிரம்) எனவும், 12 மணி நேரத்திற்கு ரூ. 7500 (ஏழாயிரத்து ஐநூறு) எனவும், 6 மணி நேரத்திற்கு ரூ. 3750 (மூவாயிரத்து எழுநூற்று ஐம்பது ) எனவும் நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் 17**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் - வார்டு எண் **93** - இடையர்பாளையம், வினாயகர் கோயில் வீதி - சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி **2010 - 2011**ம் ஆண்டு வளர்ச்சி திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலக கட்டிடத்திற்கு - மாத வாடகை நிர்ணயம் செய்வது – தொடர்பாக.

பார்வை - **1.** உதவி நிர்வாகப் பொறியாளர், தெற்கு மண்டலம் -குறிப்பு நாள் **.07.09.2012**
**2.** மாவட்ட நூலக அலுவலர் (பொ)அவர்களின் கடிதம் ந.க.எண்**.5578/**அ**3/2012** நாள்**.01.10.2012**
**3.** வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 130 நாள் 22.10.2012

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் **93** இடையர்பாளையம், வினாயகர் கோயில் வீதியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி **2010 - 2011**ம் ஆண்டு வளர்ச்சி திட்டத்தின் கீழ் புதியதாக ஒரு நூலகக் கட்டிடம் **40.40** ச.மீ (434.7 ச,அடி) பரப்பளவில் ரூ**.4.50** இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது**.** இக்கட்டிடத்திற்கு பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை விவரப்பட்டியல் படி மாத வாடகையாக ரூ**.6,900/-** நிர்ணயம் செய்யலாம் என உதவி நிர்வாகப் பொறியாளர், தெற்கு மண்டலம் பார்வை **1**ல் காணும் தனது குறிப்பில் தெரிவித்துள்ளதையடுத்து மேற்படி நூலக கட்டிடத்திற்கு மாத வாடகையாக ரூ**.6,900/-** நிர்ணயம் செய்து நூலக துறைக்கு ஒப்படை செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் மாத வாடகை ரூ1,000/- என நிர்ணயம் செய்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 130 நாள் 22.10.2012ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்**.9286/2012/**அ**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 276 நாள் : 29.11.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 130 நாள் 22.10.2012 ல் நிர்ணயம் செய்ததை ரூ. 500-(ஐநூறு மட்டும்) என நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 18**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் கனரக வாகனங்கள், பேருந்துகள், மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் இடைவிடாது செல்லும் கீழ்கண்ட சாலைகளில் பொதுமக்கள் எவ்வித பாதுகாப்புமில்லாமல் சாலையினை கடக்க முயற்சிப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுகிறது.

1. அரசினர் மருத்துவமனை எதிரே உள்ள தேசிய நெடுஞ்சாலை
2. கோயம்புத்தூர் ரயில்வே சந்திப்பு முன்புறமுள்ள தேசிய நெடுஞ்சாலை
3. உக்கடம் பேருந்து நிலையம் முன்புறமுள்ள தேசிய நெடுஞ்சாலை
4. மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையம் முன்புறமுள்ள தேசிய நெடுஞ்சாலை

மேற்கண்ட சாலைகளில் பொதுமக்கள் நலன்கருதி சாலையினை பொதுமக்கள் பாதுகாப்புடன் கடக்க சாலை இருபுறங்களிலும் தானியங்கி இயந்திரவியல் நகரும் படிக்கட்டு மற்றும் சாதாரண நடை படிக்கட்டுன் கூடிய சாலை மேல்நிலை நடைபாதை (SKY WALK WITH ESCALATOR) அமைக்கவும், அதற்கான மதிப்பீட்டினை தகுதிவாய்ந்த தொழில்நுட்ப வல்லுநரை நியமனம் செய்து தயாரிக்கவும், சாலை மேல்நிலை நடைபாதை அமைக்க செலவாகும் நிதியினை நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூர் திட்ட மேம்பாட்டு நிதியிலிருந்து முழு மானியமாகப் பெற்று பணியினை மேற்கொள்ளவோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் நிதியினை பெற்று பணியினை மேற்கொள்ளவோ அல்லது அரசிடமிருந்து பெறப்படும் மானிய நிதியுடன் மாநகராட்சி நிதியினை செலவழித்து பணியினை மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் தீர்மான எண். 147 நாள் 30.11.2011 ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் கருத்தின்படி மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையம் முன்பு மற்றும் உக்கடம் பேருந்து நிலையம் முன்புறம் உள்ள பகுதிகளுக்கு பதிலாக மாநகராட்சிக்குட்பட்ட ராமநாதபுரம் சிக்னல் முன்பு உள்ள சாலைப்பகுதி மற்றும் சிங்காநல்லூர் சிக்னல் அருகில் உள்ள சாலைப்பகுதி ஆகிய இரண்டு இடங்களிலும் பொதுமக்கள் நலன்கருதி சாலையினை பொதுமக்கள் பாதுகாப்புடன் கடக்க சாலை இருபுறங்களிலும் சாதாரண நடை படிக்கட்டுடன் கூடிய சாலை மேல்நிலை நடைபாதை (SKY WALK) அமைக்கவும், அதற்கான மதிப்பீட்டினை ஏற்கனவே இப்பணியினை கவனித்து வரும் தமிழ்நாடு கட்டமைப்பு நிதி சேவை லிமிடெட்

அவர்கள் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -

(அ) வாகன போக்குவரத்து அதிகமுள்ள மேற்கண்ட சாலையினை பொதுமக்கள் கடக்க சாலை இருபுறங்களிலும் சாதாரண நடை படிக்கட்டுடன் கூடிய சாலை மேல்நிலை நடைபாதை (SKY WALK) அமைக்கவும், அதற்கான மதிப்பீட்டினை தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவை லிமிடெட் அவர்கள் மூலம் தயாரிக்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 10388/2011 எம்.டி. 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 277 நாள் : 29.11.2012**

அலுவலகக் குறிப்புக்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது. மேலும் காந்திபுரம் கிராஸ்கட் ரோடு லட்சுமி காம்ப்ளக்ஸ் அருகில் உள்ள இடத்தில் இதுபோன்ற மேல்நிலை நடைபாதை அமைக்கவும், சரவணம்பட்டியில் சத்தி சாலையும் துடியலூர் சாலையும் சந்திக்கும் இடத்தில் ஆய்விற்குப் பிறகு சாத்தியக்கூறுகள் இருந்தால் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யவும் பிளம்பர்கள் உரிமம் வழங்குவது – குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் கோரும் விண்ணப்பங்களுக்கு குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்க மாநகராட்சி உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாக வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையில் அரசாணை (நிலை) எண்.287 நாள்.5.11.96ல் குடிநீர் இணைப்பு வேண்டுவோர் குடிநீர் இணைப்பு பெற ஆறு நடைமுறைகளை தெரிவித்து இந்த நடைமுறைகளை பரிட்சார்த்த முறையில் ஒருவருட காலத்திற்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அமல்படுத்தலாம் என அரசாணை வெளியிடப்பட்டது.

இந்த அரசாணைக்கு எதிராக தமிழ்நாடு பிளம்பர்கள் அசோசியேசன் உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.18855/96-ல் வழக்கு தொடர்ந்தனர். இதனால் அரசு வழக்கறிஞரிடம் கருத்து பெறப்பட்டு ஒவ்வொரு வருடமும் நிபந்தனைகளின் அடிப்படையில் 2005-06 மற்றும் 2006-07ம் ஆண்டு வரையில் பிளம்பர் உரிமம் (குடிநீர் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு பணிகள் செய்ய 56 நபர்களுக்கும் மற்றும் குடிநீர் இணைப்பு பணிகள் மட்டும் செய்ய 17 நபர்களுக்கும்) வழங்கப்பட்டன.

உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கில் இந்த அரசாணை வெளியிடப்பட்டு ஓராண்டிற்கு மட்டுமே செல்லுபடியாகத்தக்கதாலும் இந்த அரசாணை பரிட்சார்த்த அடிப்படையில் வெளியிடப்பட்டதாலும் மேலும் பலகாரணங்களினாலும் இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் முடிவு பெற்றது.

இத்தீர்ப்பு நகல் கோவை மாநகராட்சிக்கு 28.06.07ல் கிடைக்கப்பெற்ற பின்னர் 2006-07ம் ஆண்டிற்கு பிளம்பர் உரிமம் வழங்க பரிசீலிக்கப்பட்டு அரசாணை எண்.523 நாள்.19.9.95ஐ அமல்படுத்துவது தொடர்பாக மாநகராட்சி வழக்கறிஞரிடம் கருத்து கேட்கப்பட்டு பின்னர் புதிதாக பிளம்பர் உரிமம் வழங்குவது பற்றி முடிவு எடுக்க, புதிதாக பிளம்பர் உரிமம் வழங்க அரசால் அரசாணை ஏதேனும் வெளியிடப்பட்டுள்ளதா எனவும் பிளம்பர் உரிமம் வழங்குவதற்கு தெளிவுரை வேண்டியும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு தொடர்ச்சியாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாநகராட்சி உரிமம் பெற்ற பிளம்பர்கள் சங்கத்தின் 28.11.2011ம் தேதியிட்ட கடிதத்தில் தங்களுக்கு உரிமத்தினை வழங்குமாறும் இது சம்மந்தமாக உயர்நீதிமன்றம் 20.06.2011ல் வழங்கியுள்ள தீர்ப்பின் நகலுடன் விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த தீர்ப்பின்படி அரசாணை எண்.287/96ல் வெளியிடப்பட்டு ஒரு வருட காலத்திற்கு பரிட்சார்த்த முறையில் மட்டுமே இருந்ததால் இவ்வழக்கினை முடித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் பிளம்பர் உரிமம் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளனர். தற்போது இம்மாநகராட்சி 72 வார்டிலிருந்து 100 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டு மாநகராட்சியின் பரப்பளவு 257.04 ச.கி.மீ ஆக உயர்ந்துள்ளது. தற்பொழுது பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே உள்ளது. மேலும் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டதில் தற்போது புதிதாக இணைக்கப்பட்ட மாநகராட்சிப் பகுதியில் (நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில்),

1. குடிநீர் இணைப்பு சட்டத்திற்கு புறம்பாக அதாவது முறையான அனுமதி பெறாமல் உள்ளது கண்டறியப்பட்டது.
2. மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் அளவுமானி பொருத்தப்படவில்லை.
3. குடிநீர் இணைப்பு அனுமதி பெறாத கட்டிங்களுக்கும் மற்றும் காலி மனையிடங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
4. குடிநீர் இணைப்பு பகிர்மான குழாயிலிருந்து தாழ்வாக பதிக்கப்பட்டுள்ளதால் குடிநீரில் கழிவு நீர் கலந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது.
5. குடிநீர் இணைப்பு வழங்க உத்தரவு வழங்கப்பட்டும் இணைப்பு வழங்காமல் நிலுவையில் உள்ளது.

ஏற்கனவே, இம்மாநகராட்சியின் பழைய 72 வார்டு பகுதிகளில் இதுவரை வழங்கப்பட்ட அனைத்து குடிநீர் இணைப்புகளும் மாநகராட்சி நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டு குழாய் இணைப்புகள் பிளம்பர்கள் மூலம் கொடுக்கப்பட்டு வந்தது. அனைத்து இணைப்புகளுக்கும் முறையான உத்தரவு மற்றும் உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்ட பின்னரே குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு பணிகள் மற்றும் பழுது நீக்கும் பணிகளுக்கு மாநகராட்சியால் உரிமம் பெறப்பட்ட பிளம்பர்களுக்கு உரிமம் புதுப்பிக்கப்படவில்லை என தெரிவித்து திரு.சி.எம்.முருகேசன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.23103/12 எண்ணில் வழக்கு தொடரப் பட்டுள்ளது. இது குறித்து உயர்நீதிமன்ற வழக்கறிஞர் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு

1. கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு 197ன் கீழ் மாநகராட்சியிடம் உரிமம் பெற்ற நபர்களை தவிர மற்றவர் யாரும் குடிநீர் செல்லும் குழாய்கள் மற்றும் அதனை ஒட்டியுள்ள இடங்களில் பிரவேசிக்க கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் குடிநீர் இணைப்பு மற்றும் விநியோகப் பணிகளை செய்வதற்கான பிளம்பர்களுக்கு உரிய அனுமதி வழங்கவேண்டியுள்ளது.

2. மேலும் மாநகராட்சி உபவிதிகளிலும் சில மாறுதல்களும் கூடுதல் சேர்க்கைகளையும் மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

<u>மாநகராட்சி வரைவு உபவிதிகளில் கீழ்கண்டவாறு மாறுதல்கள்:-</u>

1. பக்கம் 1ல் 1."ஆ''வில், குடிநீர் இணைப்பு பெறுவதற்காக 1981 ஆம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு, 200 (1)இன் படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணபத்தினை கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரின் அனுமதியுடன், அதற்கான படிவ கட்டணம் மற்றும் மதிப்பீட்டு கட்டணம் ரூ.125 (ரூபாய் நூற்று இருபத்திஐந்து மட்டும்) செலுத்தி படிவம் 'அ' பெற்று ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். பதிவு கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கீடு முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீடு கட்டணங்களை மாநகராட்சியில் செலுத்தி உத்தரவு பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் தொடங்கப்பட வேண்டும் என உள்ளதில், குடிநீர் குழாய் இணைப்பு "மாநகராட்சியின் உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாக"வழங்கப்படும் எனவும்

2. 1."இ''ல் மனுதாரர் குடிநீர் பெறுவதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் மேற்படி வேலைகளை மேற்பார்வையிடுவதற்கான கட்டணமாக 10% பணியீட்டுத் தொகையாக மனுதாரர் செலுத்த வேண்டும். இத்துடன் சாலை சீரமைப்பு கட்டணம் மற்றும் அனுமதியற்ற கட்டிடங்களுக்கு நிர்ணயம் செய்யும் அபராத கட்டணமும் செலுத்த வேண்டும். என உள்ளதில், மனுதாரர் குடிநீர் பெறுவதற்காக என உள்ளதை "மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு தருவதற்காக" எனவும்

3. 1."ஈ''ல் அரசு கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு பெறுவதற்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்களை முன்பணமாக மாநகராட்சிக்கு செலுத்த வேண்டியது இல்லை. இணைப்பு உத்தரவு பெற்று பிறகு உரிய தொகையினை மாநகராட்சிக்கு செலுத்திய பின்னரே குடிநீர் இணைப்பு வழங்கப்படும். என உள்ளதில், "இதர கட்டணங்கள் இதனை "இதர கட்டணங்களை" எனவும், மேலும் "ஆனால்" இணைப்பு உத்தரவு பெற்றபிறகு "மதிப்பீட்டு" தொகையினை எனவும்

4. 1."ஊ''வில் குடிநீர் குழாய் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும் முன்னரே விண்ணப்பதாரர் நிலுவையிலுள்ள சொத்து வரிகள் அனைத்து மாநகராட்சியில் செலுத்தியிருக்க வேண்டும். என உள்ளதில் விண்ணப்பதாரர் "அந்தக் கட்டிடத்திற்கு" நிலுவையில் உள்ள எனவும்

**5.** 2.ல் வீட்டு உபயோகத்திற்கோ அல்லது வீட்டு உபயோகம் அல்லாத உபயோகத்திற்கோ வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு அளவுமானிகள் பொருத்தப்பட்டு அளவுமானி முறையில் பொருத்தப்படாமல் (Tap rate) உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் (Tap rate) அறிவிப்பு பெறப்பட்ட 60 நாட்களுக்குள் அளவுமானி குடிநீர் இணைப்பாக மாற்றப்பட வேண்டும். அவ்வாறு மாற்றப்படாமல் இருப்பின் மறு அறிவிப்பின்றி குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும். என உள்ளதில் (Tap rate) உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் "இந்த உபவிதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து" 60 நாட்களுக்குள் எனவும்

**6.** "3.அ"வில் வழங்கப்படும் குடிநீர் வீட்டு உபயோகங்களுக்கானது (Domestic) அல்லது வீட்டு உபயோகமல்லாத ( Non Domestic) பயன்பாட்டிற்கு என்பதை கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சட்டம் 1981, 200 வது பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொரு தருணத்திலும் பயன்பாட்டின் அடிப்படையில் முடிவு செய்யப்படும். என உள்ளதில் வழங்கப்படும் குடிநீர் வீட்டு உபயோகங்களுக்கானதா (Domestic) அல்லது வீட்டு உபயோகமல்லாத ( Non Domestic) பயன்பாட்டிற்கானதா என்பதை கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சட்டம் 1981, பிரிவு 200ன் கீழ் எனவும் மாற்றம் செய்யலாம் .

**<u>5 என எண்ணிட்டு :-</u>**

**மாநகராட்சி உரிமம் பெற்ற பிளம்பர்கள் :-**

(அ) மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வகையான குடிநீர் இணைப்புகளும் மாநகராட்சியில் உரிமம் பெற்ற பிளம்பர்கள்மூலமாகவே செய்யப்பட வேண்டும்.

(ஆ) **தகுதிகள் :-**

மாநகராட்சியிடம் உரிமம் கோரி விண்ணப்பிக்கும் பிளம்பர்கள் கீழ்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

1. பத்தாம் வகுப்பு படித்தவராக இருக்க வேண்டும். (தேறிய/தவறிய)

2. ITI குழாய் வேலை செய்யும் பிரிவில் Plumber Trade (National Council for Vocational Training) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3. குழாய் பொருத்தும் பணிகளில் குறைந்த பட்சம் மூன்றாண்டுகள் முன் அனுபவம் உள்ளதற்கான சான்றிதழ்கள் ஒப்படைக்க வேண்டும்.

4. முந்தைய பணி காலத்தில் பணிபுரிந்த நிறுவனத்திடமிருந்து தரமான வேலைகளை செய்வதற்கான நன்னடத்தை சான்றிதழ் பெற்று ஒப்படைக்க வேண்டும்.

5. மேலும் வயது 21 முதல் 45 வரையில் புதிய பிளம்பர் உரிமம் வழங்கப்படும், 60 வயது வரையில் உரிமம் நீட்டிப்பு செய்யப்படும். மேலும் அரசாணை எண்.523 நாள் : 19.09.1995-ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி

6. ரூ. 5,00,000 ற்கான கடன் தீர்வை சான்றிதழ் (Solvency Certificate) ஒப்படைக்க வேண்டும்.

7. காப்பீட்டு தொகையாக ரூ. 2 இலட்சம் செலுத்த வேண்டும்.

8. தகுதியுடையவர்களுக்கு வருடாந்திர உரிமம் புதுப்பித்தல் கட்டணமாக ரூ. 500. செலுத்த வேண்டும்.

9. மாநகராட்சி விதிகளுக்கு புறம்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டால் பிளம்பர் உரிமம் ரத்து செய்யப்படும்.

எனவே, மாநகராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்குவது குறித்து மாநகராட்சி வரைவு விதி (By Law) மற்றும் துணை விதிகளில் உரிமம் பெற்ற பிளம்பர்கள் குறித்து இல்லாத காரணத்தால் இனி வரும் காலங்களில் மாநகராட்சியில் உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாக வழங்கலாம் என்பதை மாநகராட்சி குடிநீர் விநியோக வரைவு துணை விதிகளில் மேற்காண் திருத்தங்கள் செய்யவும் மற்றும் துணை விதிகள் அமலுக்கு வரும் காலம் வரை உள்ள காலத்திற்கு தற்காலிகமாக பிளம்பர் உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் : 3851/07/MD2.

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 278 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் பிளம்பர்கள் மாநகராட்சி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 20**

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அவிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்ட பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி | | | | | | |
| 1 | 1618/12/ எம்.டி5 | வார்டு எண் 48ல் முத்துகுமார் நகரில் உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உடற்பயிற்சி சாலை கட்டுதல் | 44.00 | 17.08.2012 | 1. தி/ வா. என்.பி.கே. அசோசியேட்ஸ் 4.95 % அதிகம்<br>2. திருமதி. கே. பங்கஜம் 24.80% அதிகம்<br>3. தி/ வா. பி.எஸ்.கே. அசோசியேட்ஸ் 5.43% அதிகம்<br>4.திரு.ஆர். செல்வராஜ் 632.92 % அதிகம் | தி/வா. என்.பி.கே. அசோசியேட்ஸ் 4.95 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டைவிட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1618/12/எம்,டி,5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 279 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதத் தொகையுடன் விலைப்புள்ளிகளுக்கு ஒப்புதல் அளிப்பதை எதிர்காலத்தில் தவிர்க்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 21**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - புதிய வார்டு எண் 85 மற்றும் 78-ல் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 18 மற்றும் 19ல் அமையும் CC60 அடி திட்டச்சாலை மற்றும் AA 60 அடி திட்ட சாலைகள் பொன்னையராஜபுரத்தில் இருந்து செல்வ சிந்தாமணி குளக்கரை வழியாக செல்வபுரம் வடக்கு ஹவுசிங்யூனிட் வரை சாலை அமைத்தல் - தொடர்பாக

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட புதிய வார்டு எண் 85 ல் நகர விரிவு அபிவிருத்தித் திட்டத்தில் ( திட்ட எண் 18) CC 60 அடி திட்ட சாலை அமைக்கப்பட்டு முழுமைபெறாமல் நகர அளவை எண். 140/6, 140/9 ல் நிலம் சாலைக்காக எடுக்கப்பட வேண்டியுள்ளது.

தனியாரிடம் இருந்து சாலைக்காக எடுக்கப்பட வேண்டிய இடத்தில் நீளம் 115 மீ அகலம் 18 மீ. மேற்படி இடம் தற்போது காலியாக உள்ளது. சாலைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டிய இடத்தின் பரப்பளவு 2070 ச.மீ. இந்த இடத்திற்கு நில மதிப்புத் தொகை ஏற்கனவே மாவட்ட வருவாய் அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்டு கடிதம் பெறப்பட்டு உள்ளது. அதில் ஒரு சதுர அடிக்கு ரூ. 1380 என குறிப்பிடப்பட்டு உள்ளது.

நில உரிமையாளர்களிடம் இருந்து மாவட்ட நிர்வாகம் நிர்ணயம் செய்யும் தொகையை பெற்றுக்கொள்ள சம்மதக் கடிதம் பெறப்பட்ட பின்னர், இத்தொகையை மீண்டும் மாவட்ட நிர்வாகத்தில் ஊர்ஜிதம் செய்து சாலைக்கான இழப்பீட்டுத் தொகை வழங்கவும், இத்திட்டச் சாலை தொடர்ச்சியாக வார்டு எண் 78 ல் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 19 ல் AA 60 அடி திட்ட சாலை உத்தேசிக்கப்பட்டு அச்சாலை மேற்கு நோக்கி செல்வபுரம் ஹவுசிங் யூனிட்டில் உள்ள 60 அடி சாலையுடன் இணைக்கிறது. இதனால் தடாகம் சாலையில் இருந்து சிறுவாணி பேரூர் செல்ல போக்குவரத்து நெரிசல் இல்லாமல் பொதுமக்களுக்கு மிகுந்த பயன்பாடு உள்ள சாலையாக இருக்கும்.

இந்த திட்ட சாலை நகர அளவை எண் 558, 559, 125/33, 125/32,126, 129/32, 130/3, 134, 135 ஆகிய பூமிகளில் செல்கிறது. இச்சாலை அமைய உள்ள இடத்தில் ஒரு பகுதி வாய்க்கால் குளக்கரை மற்றும் பட்டா பூமியாக உள்ளது. இச்சாலையின் குறுக்கே பாலம் அமைக்கப்பட வேண்டிய உள்ளது. இச்சாலையின் மொத்த நீளம் 620 மீ அகலம் 18 மீ. இதில் அங்கீகரிக்கப்பட உள்ள மனைப்பிரிவு மூலம் கிடைக்கப்பெற்று உள்ள சாலையின் விபரம் 170 மீ x 7 மீ. மீதம் உள்ள பட்டா நிலத்திற்கு (7522 ச.மீ. பரப்பளவு) நில மதிப்புத்தொகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிர்ணயம் செய்யவும், அதன் அடிப்படையில் சாலைக்கான இடத்தினை ஆர்ஜிதம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த திட்ட சாலையில் அமையும் நில விபரங்கள் மற்றும் பரப்பு

| வ.எண் | சர்வே எண் | நில உரிமையாளர்கள் விபரம் | பரப்பு | அரசு வழிகாட்டி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 140/6 | கங்கா கார்டன் | 1377 ச.மீ (14820 ச.அடி) | 153.60/ ச.அடி |
| 2 | 140/9 | சி.பி. நாராயண அய்யர் த/பெ. வெங்கடராமன் | 736 ச.மீ (7919 ச.அடி) | 153.60/ ச.அடி |
| 3 | 558, 559 | வாய்க்கால் மற்றும் குளக்கரை (மண் சாலையாக உள்ளது) | 2610 ச.மீ (28090 ச.அடி) | - |
| 4 | 125/33 | வாய்க்கால் (சிறிய பாலத்துடன் உள்ளது) | 824.16 ச.மீ (8868 ச.அடி) | - |
| 5 | 125/32 | பட்டா பூமி | 1277.60 ச.மீ (13747 ச.அடி) | - |
| 6 | 126/1 | பட்டா பூமி | 1516.36 ச.மீ (16316 ச.அடி) | - |
| 7 | 126/2 | பட்டா பூமி | 436 ச.அடி | - |
| 8 | 129/2 | பட்டா பூமி | 2125 ச.மீ (22865 ச.அடி) | - |
| 9 | 135/1 | பட்டா பூமி | 1521.28 ச.மீ (16369 ச.அடி) | |
| 10 | 130/10 | பட்டா பூமி | 677.79 ச.மீ (7293.ச. அடி) | |
| 11 | 134 | வாய்க்கால் | 1744 | |
| 12 | 4742 | பட்டா பூமி | 405 ச.மீ (4358 ச.அடி) | |

அலுவலகக் குறிப்பு :- திட்டச் சாலைக்கான இடம் 9597 ச.மீ (2.40 ஏக்கர்) நில ஆர்ஜிதம் செய்யவும், பாலங்களுடன் சாலையினை அமைக்கவும் அதற்கு தேவையான நிதியினை உள்ளூர் திட்டக்குழுமம் அல்லது உள் கட்டமைப்பு நிதி மூலம் பெற்று திட்டச்சாலையினை அமைக்கவும் தீர்மானிக்கலாம்.

ந.க.எண் 7853/2012/ எம்.எச். 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 280 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் எல்லைக்குட்பட்ட வடவள்ளி கிராமம் புல எண்.**421/1** ல் உள்ள **0.06.0** ஹெக்டேர் **(15** செண்ட்**)** நிலத்தினை வடவள்ளி சார்பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு நில மாற்றம் செய்திட மாநகராட்சியின் இசைவினை தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டுதல் –தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வடவள்ளி கிராமம் க.ச.எண்.**421/1** ல் **0.06.0** ஹெக்டேர் நிலத்தினை வடவள்ளி சார்பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு நில மாற்றம் செய்திட கோயம்புத்தூர் மாநகராட்சியின் இசைவினை தீர்மான வடிவில் கேட்டு வட்டாட்சியர் தெற்கு அவர்கள் கடிதம் அனுப்பியுள்ளார்.

புல எண்.**421/1** பரப்பு **1.24.0** ஹெக்டேர் நிலம் அரசு நெடுஞ்சாலை புறம்போக்காக நெடுஞ்சாலைத் துறை சாலையாக மருதமலை அடிவாரப்பகுதியில் உள்ளது. மேற்படி இடத்தினை வருவாய் துறையால் உட்பிரிவு செய்யப்பட்டு புல எண்.**421/1 , 0.63.5** ஹெக்டேர் பரப்பு LF ரோடாக வருவாய் துறை ஆவணத்தில் பதியப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் **0.06.0** ஹெக்டேர் **(15** செண்ட்**)**

நிலப்பரப்பில் சார்பதிவாளர் அலுவலகம் கட்ட மாநகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என்ற கருத்தினை தெரிவிக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- வடவள்ளி கிராமம் க.ச.எண்.421/1ல் 0.06.0 (15 சென்ட்) ஹெக்டேர் நிலத்தில் சார்பதிவாளர் அலுவலகம் கட்ட மாநகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என தீர்மானிக்கலாம்.

ந.க.எண்.13496 /2012/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 281 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 23**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரப் பிரிவு - துப்புரவுப் பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்வது – திரு.எம். முகம்மது சுலைமான் - ஆய்வக தொழில்நுட்ப பணியாளர் - தொகுப்பு ஊதியத்தில் பணிபுரிய மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டல் - தொடர்பாக

-----------------

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித எண் 55567/12 நாள் 19.03.2012-ல் தெரிவித்துள்ளபடி, கோயம்புத்தூர் மாநகராட்சி அனைத்து மண்டலங்களில் பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களுக்கு மாநகராட்சி மருந்தக மருத்துவ அலுவலர்கள் மூலம் முழு உடல் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

இதன்படி துப்புரப் பணியாளர்களுக்கு ஆய்வுக்கூட பரிசோதனைகள் செய்ய ஆய்வக தொழில்நுட்ப பணியாளரை அனுப்பக் கோரி ஹைடெக் டையக்னாஸ்டிக் சென்டருக்கு கடிதம் அனுப்பியதில், திரு.எம். முகம்மது சுலைமான், ஆய்வக தொழில்நுட்ப பணியாளரை 3 மாத காலங்களுக்கு பணிபுரிய அனுப்பியுள்ளார்கள்.

எனவே, திரு.எம். முகம்மது சுலைமான், ஆய்வக தொழில்நுட்ப பணியாளரை ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ. 10,000- வீதம் 3 மாத காலங்களுக்கு பொது சுகாதார ஆய்வுக்கூடத்தில் துப்புரவு பணியாளர்களுக்கு ஆய்வுக்கூட பரிசோதனைகள் செய்ய 12.09.2012 ம் தேதி முதல் பணிக்கு அமர்த்தியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 3570/2012/எம்.இ. 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 282 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 24**

| | |
|---|---|
| **பொருள் :** | கோயம்புத்தூர் மாநகராட்சி – சிறுவாணி – பில்லூர் II குடிநீர் திட்டங்களை இணைத்தல் - இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பில்லூர் II-ம் குடிநீர் திட்டத்திலிருந்து பாரதி பூங்காவிலுள்ள சிறுவாணி நீர்த்தேக்க தொட்டிக்கு இரும்பு நீர்க்கொணரும் குழாய்கள்(MS Pipes) இணைத்து குடிநீர் விநியோகம் செய்தல்- மதிப்பீட்டுத் தொகை ரூ.1716 லட்சம் - விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது – அரசிடமிருந்து நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திலிருந்து நிதி உதவி, தொழில்நுட்ப அனுமதி பெற்று திட்டம் செயல்படுத்த மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பு |
| **பார்வை :** | கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.196 நாள்.16.08.2012 |

********

பார்வையில் கண்ட கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற தீர்மானத்தில், இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பில்லூர்-IIம் குடிநீர் திட்டத்திலிருந்து பாரதி பூங்காவிலுள்ள சிறுவாணி நீர்த்தேக்கத் தொட்டிக்கு இரும்பு நீர்க்கொணரும் குழாய்கள் (M.S.Pipes) இணைத்து குடிநீர் விநியோகம் செய்தல் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ1500.00 இலட்சங்களுக்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறவும் மற்றும் அரசு மானியம்/ கடனுதவி பெற்று திட்டத்தை நிறைவேற்றவும் தொழில்நுட்ப அனுமதி பெறவும், நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் அரசுக்கு பிரேரணை அனுப்பவும் மாமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. மேலும், திட்டத்திற்கான உத்தேச

மதிப்பீட்டுத் தொகை ரூ1500.00 இலட்சம் முழுமையும் அரசு மானியமாக வழங்கி திட்டத்தை செயல்படுத்த உதவிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்ளும் பிரேரணை அனுப்பவும் மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது மேற்படி திட்டத்திற்கு, ஆலோசகர்களான ஃபிட்சனர் கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட் சென்னை, அவர்களால் மதிப்பீட்டுத் தொகை ரூ.1716.00 லட்சங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்ட அறிக்கையில் 914மி.மீட்டர் மற்றும் 1016மி.மீட்டர் விட்டமுள்ள பிரதான இரும்பு நீர்கொணரும் குழாய்கள் (MS Pipes) 10.23கி.மீ நீளத்திற்கு அமைக்குமாறு வழி வகை செய்யப்பட்டுள்ளது. எனவே ரூ.1716.00 லட்சங்களுக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வேண்டியும் மற்றும் முழுமையான செலவுத் தொகையும் பகுதி II திட்டம்/உள் கட்டமைப்பு இடைநிரப்பு நிதியின் கீழ் செயல்படுத்தவும் நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் பிரேரணை அரசுக்கு அனுப்பவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

திட்டத்திற்கான, விரிவான திட்ட அறிக்கை மதிப்பீட்டு தொகை ரூ 1716.00 இலட்சங்களுக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வேண்டியும் மற்றும் முழுமையான செலவுத் தொகையும் பகுதி II திட்டம்/உள் கட்டமைப்பு இடைநிரப்பு நிதியின் கீழ் செயல்படுத்தவும் நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் பிரேரணை அரசுக்கு அனுப்பவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.4603/2012/ப.வ.(எம்)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 283 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

**பொருள்–** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு மாநகராட்சிகள் 1996ம் ஆண்டு பொதுப் பணியமைப்பு விதிகள் வகுப்பு II வகை 4ன்படி நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு வகுப்பு III பிரிவு–I வகை 1 மற்றும் 2 பணியாளர்களான கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியல் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

------

தமிழ்நாடு மாநகராட்சிகள் 1996ம் ஆண்டு பொதுப் பணியமைப்பு விதிகள் வகுப்பு II வகை 4ன்படி நிர்வாக அலுவலர் பணியிடங்களை வகுப்பு III பிரிவு–I வகை 1 மற்றும் 2 பணியாளர்களான கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர்களின் பணிமூப்பு பட்டியலின்படி நிரப்பலாம்.

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.மு.துரைராஜ் அவர்கள் 31.01.2013ல் ஓய்வு பெற உள்ளார். புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மத்திய மண்டல அலுவலகத்தின் அங்கீகாரத்திற்கும், அலுவலர் மற்றும் பணியாளர்களின் நியமனத்திற்கும் ஒப்புதலுக்காக அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. எனவே மத்திய மண்டலத்திற்கு ஒரு நிர்வாக அலுவலர் பணியிடம் ஒதுக்கப்படவேண்டும். எனவே, தற்போது இரண்டு நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு தேர்ந்த பெயர்ப் பட்டியல் (Panel) வெளியிடப்பட வேண்டும்.

மேலும், அரசாணை எண்.179, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 05.10.2009ன் படி நிர்வாக அலுவலரை நியமனம் செய்ய கண்காணிப்பாளர் அல்லது உதவி வருவாய் அலுவலர் பணியிடத்தில் 2 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பணிமூப்பிலுள்ள கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர்கள் இரண்டாண்டுகள் பணி பூர்த்தி செய்துள்ளனர்.

எனவே, வகுப்பு IIல் இரண்டு நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு வகுப்பு III பிரிவு –1 வகை 2 மற்றும் 3 பணியாளர்களான கண்காணிப்பாளர் பணிமூப்பு பட்டியல் ந.க.எண். 2/2012/எம்சி2 நாள். 19.03.2012–ன்படி பணிமூப்பின் அடிப்படையில் நிரப்பலாம்.

<u>**திருமதி.யா.உஷாராணி**</u>

இவர் தற்போது மத்திய மண்டலத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் மத்திய மண்டலத்தின் நிர்வாக அலுவலருக்கான கூடுதல் பொறுப்பையும் கவனித்து வருகிறார். இவர் மீது குற்றச்சாட்டுக்கள் ஏதும் நிலுவை இல்லை. எனவே இவர் பெயரை மாமன்ற ஒப்புதல் பெற சேர்க்கலாம்.

<u>**திருமதி.ஆர்.மோகனசுந்தரி**</u>

இவர் தற்போது குடிநீர்பிரிவில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் மீது குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவை இல்லை. எனவே இவர் பெயரை மாமன்ற ஒப்புதல் பெற சேர்க்கலாம்.

எனவே **31.03.2013** வரை உள்ள காலத்திற்கு பதவி உயர்வுகள் வழங்கும் பொருட்டு கீழ்க்கண்டவர்களின் பெயர்களை **01.09.2012.**–க்கான தேர்ந்த பெயர்ப்பட்டியலில் சேர்க்கலாம்.

| வ.எண். | பெயர் | கண்காணிப்பாளர் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1. | திருமதி.யா.உஷாராணி | 05.06.2009 |
| 2. | திருமதி.ஆர்.மோகனசுந்தரி | 24.07.2010 |

மேலும் வகுப்பு–II வகை 4ல் உள்ள நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு வழங்க தேர்ந்த பெயர்ப்பட்டியலை மாமன்றத்தில் ஒப்புதலுக்காக மன்றத்தாள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: பரிசீலிக்கலாம். ந.க.எண்.3/2012/எம்சி2

<u>**மாநகர மன்ற தீர்மானம் எண் : 284 நாள் : 29.11.2012**</u>

பொருளுக்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 26

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி - நகரமைப்பு பிரிவு- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் இருந்து நேரு விளையாட்டு அரங்கத்தினை கோயம்புத்தூர் மாநகராட்சி வசம் எடுத்து பராமரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பித்தல் - தொடர்பாக.

பார்வை: திரு.ப.ராஜ்குமார், M.A., B.L., Ph.D., வடக்கு மண்டல தலைவர் அவர்களின் கடிதம் நாள்.23.11.2012.

******

பார்வையில் காண் வடக்கு மண்டல தலைவர் அவர்களின் கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள நேரு விளையாட்டு அரங்கம் கோயம்புத்தூர் மாநகராட்சியால் கட்டப்பட்டு கடந்த **24.10.1988** அன்று தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இதில் **1,35,000** சதுர அடிகளில் சுமார் **60** கடைகள் உள்ளதாகவும், இவற்றின் மூலம் சுமார் **7.23** இலட்சம் மாத வருவாய் வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், மேற்படி விளையாட்டு அரங்கத்திற்கு மிகக்குறைந்த தொகை மட்டுமே பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்கு செலவிடப்பட்டு வருவதாகவும் விளையாட்டு வீரர்களுக்கு போதுமான வசதிகள் (குடிநீர், உடை மாற்றும் அறை, உபகரணங்கள் மற்றும் பயிற்சியாளர்கள் இல்லை) செய்து தரப்படப்படாமலும், மைதானம் முறையாக பராமரிக்கப்படாமல் உள்ளதாகவும் விளையாட்டு வீரர்கள் போட்டியின் போது தங்கி செல்ல அறைகள் ஏதும் இல்லாமலும் உள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், விதிகளுக்கு புறம்பாக நுழைவாயில்கள் சிலவற்றை வாடகைக்கு

விடப்பட்டும், கடைகள் வாடகை, சந்தை மதிப்பீட்டின்படி நிர்ணயிக்கப்படாததால் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கடந்த 24 வருடங்களாக விளையாட்டு துறையில் நேரு விளையாட்டு அரங்கத்தின் மூலமாக சொல்லும்படியான எந்தவித முன்னேற்றமும் இல்லை எனத் தெரிவித்துள்ளார். ஆகவே, மேற்படி காரணங்களை பரிசீலித்து நேரு விளையாட்டு அரங்கத்தை மாநகராட்சி வசம் எடுத்து நன்கு பராமரித்து விளையாட்டு துறையை மேம்படுத்த உதவுமாறு கேட்டு கொண்டுள்ளார்.

மாநகராட்சி மூலம் அரசு உத்திரவு பெற்று விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு ஒப்படைக்கப்பட்ட இடம் மற்றும் கடைகள் பகுதியை பராமரிப்பு பணி ஏதும் இல்லாததால் மீண்டும் அரசின் அனுமதி பெற்று கோயம்புத்தூர் மாநகராட்சி வசம் எடுத்து பராமரிப்பது தொடர்பாக முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றத்தின் முடிவிற்கு. **ந.க.எண். 13635 /2012/எம்.எச்.5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 285 நாள் : 29.11.2012**

நேரு உள்விளையாட்டு அரங்கத்தை முழுமையாக மாநகராட்சியிடம் ஒப்படைக்க அரசை கேட்டுக் கொள்ள பிரேரணை அனுப்பலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 27

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம் - வார்டு எண்.51 பொன்னே வீதி மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

பார்வை :
1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129நாள்.22.10.2012.

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.129 நாள்.22.10.12-ன் படி

1. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 51 பொன்னே வீதியில் உள்ள 6 மாநகராட்சி வணிக வளாக கடைகள் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்ததால் அக்கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி 01.04.2013 முதல் வாடகையினை உயர்வு செய்யலாம். உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும், மான்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 286 நாள் : 29.11.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 129 நாள் 22.10.2012 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்புக்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது. மேலும் உள் வாடகைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தால் உரிமத்தை ரத்து செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 28

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சிகுட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் வணிகவளாக கடைகளுக்குண்டான பொது ஏல நிபந்தனைகளுடன் கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சிறப்பு நிபந்தனைகளாக சேர்ப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி கோருவது- தொடர்பாக

**பார்வை :** வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 152 நாள் 28.11.2012

***<u>சிறப்பு ஏல நிபந்தனைகள்</u>***

- கோயம்புத்தூர் மாநகராட்சி அனைத்து மண்டலங்களுக்கான ஏல இனங்களுக்கு கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் அந்தந்த இனங்களுக்கான வைப்பு தொகை, காப்பு தொகை மற்றும் சால்வென்சி தொகை முதலிய தொகைகளை ரொக்கமாகவோ வரைவோலையாகவோ (Demand Draft) மண்டல / பிரதான அலுவலக கருவூலத்தில் செலுத்தி அதற்கான இரசீதை பெற்று ஏல இனங்களுக்கு பதிவு செய்து கொள்ளவேண்டும்.
- ஏலத்தின் போது இரண்டாவது உச்ச கேள்வி கோரிய நபரின் ஏல டெபாசிட் தொகையை முதல் உச்ச கேள்விதாரரின் ஏலத்தொகை உறுதி செய்து முழுத் தொகையையும் செலுத்தும்வரை இரண்டாவது உச்சக் கேள்விதாரருக்கு திரும்ப அளிக்கப்படமாட்டாது.
- உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய ஏலதாரர் அறிவிப்பில் தெரிவிக்கப்படும் கால அவகாசத்திற்குள் ஒருவருட உரிமைத்தொகையினை செலுத்தப்படவில்லை எனில் அவர் செலுத்தியுள்ள ஏல வைப்பு தொகைகள் அனைத்தையும் பறிமுதல் செய்யப்படும்.
- உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரிய நபரால் உரிமைத்தொகை செலுத்தாத பட்சத்தில் மறு ஏலம் கொண்டுவரவோ அல்லது இரண்டாவது ஏலத்தொகை கோரியுள்ள ஏலதாரரின் ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்யவோ மாமன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு.
- மாநகராட்சி ஏல நிபந்தனைகளை பின்பற்றாமலும் குத்தகை இனங்களில் கூடுதல் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர்களுக்கு ஏலத்தொகையில் குறைந்தபட்சம் 5% அல்லது ரூ.25000/- இவ்விரண்டில் எது அதிகமோ அத்தொகையினை அபராதமாக விதிக்கலாம்.
- குத்தகை இனங்களில் தொடர்ந்து கூடுதல் கட்டணம், ஏல நிபந்தனைகளை பின்பற்றாமலும், மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் குத்தகைதாரர்களின் உரிமம் இரத்து செய்யப்பட்டு, அவரது பெயர் கருப்பு பட்டியலில் சேர்க்கப்படும். மேலும் அவர் தொடர்ந்து வரும் மாநகராட்சி ஏல இனங்களில் கலந்து கொள்ள இயலாது. அவர் செலுத்தியுள்ள உரிமத்தொகை மற்றும் வைப்பு தொகை முழுவதும் பறிமுதல் செய்யப்படும், உரிமம் ரத்து செய்யப்பட்ட காலத்திற்கான தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது.
- ஒதுக்கீடு செய்யப்பட்ட குத்தகை இனங்களுக்கு வைப்பு தொகை மற்றும் அதற்கான ஏலத்தொகையுடன் வருமானவரி, சேவைவரி மற்றும் அவ்வப்பொழுது மத்திய, மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் இதர வரிகளை உரிமதாரரால் செலுத்தப்பட வேண்டும்.

- உரிமதாரர்கள் ஒதுக்கீடு செய்யப்படும் மாதாந்திர கடைகளுக்கு வைப்பு தொகை, காப்பு தொகை மற்றும் ஒரு வருட வாடகை முன்பணம் சேவைவரி மற்றும் அவ்வப்பொழுது பிறப்பிக்கப்படும் இதர வரிகளை அறிவிப்பு கிடைத்தவுடனே ஒதுக்கீடு செய்யப்படும் வரி விதிப்பு எண்ணில் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்ட பின்னரே ஒதுக்கீடு உத்திரவு பிறப்பிக்கப்படும்.
- உரிமம் ஒதுக்கீடு செய்ய மாமன்ற ஒப்புதல் பெறப்பட்ட ஒரு வார காலத்திற்குள் ஏலதாரருக்கு ஒதுக்கீடு அறிவிப்பு வழங்கப்படும். ஏலதாரரால் ஒருவருட வாடகை முன்பணம் மற்றும் முத்திரை தாளில் ஏலதாரரின் புகைப்படத்துடன் கூடிய ஒப்பந்தப்பத்திரம் ஒரு வார காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும். அறிவிப்பு வழங்கப்பட்ட ஒரு வார காலத்திலிருந்து வாடகை கணக்கீடு செய்யப்படும்.
- குத்தகை இனங்களில் பெறப்பட்டுள்ள ஏல வைப்பு தொகை, காப்பு தொகை மற்றும் சால்வென்சி தொகை ஆகியவற்றில் ஏல வைப்பு தொகை தவிர மீதமுள்ள தொகைகளை ஏலதாரர் செலுத்தப்பட வேண்டிய ஒருவருட உரிமத்தொகையில் சரி செய்து கொள்ளப்படும்.
- கடைகளுக்கு பெறப்பட்டுள்ள ஏல வைப்பு தொகை, காப்பு தொகை மற்றும் சால்வென்சி தொகை ஆகியவற்றில் காப்பு தொகையினை மட்டும் ஏலதாரர் செலுத்தப்பட வேண்டிய ஒருவருட உரிமத்தொகையில் சரி செய்து கொள்ளப்படும்.
- மூன்றாண்டுகளுக்கு உரிமம் பெற்ற குத்தகைதாரர்கள் முதலாம் / இரண்டாம் ஆண்டு முடிவில் தொடர்ந்து நடத்த சம்மதம் தெரிவிக்காத நேர்வில் அவரால் செலுத்தப்பட்டு மாநகராட்சி வசம் உள்ள வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படும்.

<u>அலுவலகக்குறிப்பு</u> : அனுமதிக்கலாம் ந.க.எண் 14317/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 287 நாள் : 29.11.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 152 நாள் 28.11.2012 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 29

**பார்வை** : 1. அரசாணை எண் 78 ந.நி.ம.கு.வ.துறை (மா.ந.2) நாள் 25.05.2009
2. வரிவிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 151 நாள் 28.11.2012

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட 4 குத்தகை இனங்களை குத்தகை பெற்றுள்ள குத்தகைதாரர்கள் அரசாணை எண் 78 நாள் 25.05.2009 ந.நி.ம.கு.வ.துறை (மா.ந.2)ல் தெரிவித்துள்ளபடி 2012 – 2013 ம் ஆண்டிற்கான குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2013- 2013 ம் ஆண்டுக்கு உரிமம் புதுப்பிப்பு செய்வதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்புதல் கடிதம் அளித்துள்ளனர்.

| வ.எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் | உரிமம் வழங்கப்பட்ட மாமன்ற தீர்மான எண் / நாள் | உரிமம் வழங்கப்பட்ட ஆண்டு | உரிமம் நீட்டிப்பு வழக்கப்படும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | துடியலூர் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.சி.ரெங்கராஜ் | 40/ 25.05.2012 | 2012- 2013 | 2013 - 2014 இரண்டாம் ஆண்டு |
| 2 | துடியலூர் இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.கே.தீபன் | 288/ 28.03.2012 | 2012- 2013 | 2013 - 2014 இரண்டாம் ஆண்டு |
| 3 | துடியலூர் கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திருமதி.பி.விஜயா | 8 / 27.04.2012 | 2012- 2013 | 2013 - 2014 இரண்டாம் ஆண்டு |
| 4 | பாப்பநாயக்கன் பாளையம் கட்டண கழிப்பிடம் | திரு.சி.செல்வம் | 259/ 28.02.2011 | 2011- 2012 | 2013-2014 மூன்றாம் ஆண்டு |

மேற்குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு அரசாணையில் தெரிவித்துள்ளபடி முந்தைய ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2013 - 2014 ம் ஆண்டிற்கு உரிமம் நீட்டிப்பு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 151 நாள் 28.11.2012 ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : அனுமதிக்கலாம் ந.க.எண் 903 /2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 288 நாள் : 29.11.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 151 நாள் 28.11.2012 ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 30

**பொருள்** கோயம்புத்தூர் மாநகராட்சி மத்தியமண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.72 நஞ்சப்பா ரோடு மாநகராட்சி வணிக வளாகத்தில் உள்ள அரசு அலுவலகத்திற்கு உயர்த்தப்பட்ட வாடகையினை மறு பரிசீலனை செய்ய கோருதல் - தொடர்பாக

**பார்வை** 1.மாமன்ற தீர்மான எண்.190 நாள் 16.08.2012.
2.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.143 நாள்.28.11.12

-----

பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி வார்டு எண்.72 நஞ்சப்பா ரோடு மாநகராட்சி வணிக வளாகத்தில் இயங்கி வரும் கீழ் கண்ட அரசு அலுவலங்களுக்கு 01.09.2012-ம் தேதி முதல் பொதுப்பணி துறை மதிப்பீட்டின் படி வாடகை உயர்வு செய்யப்பட்டது.

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | கடையின் அளவு | மொத்த ச.அடி | தற்போதைய மாத வாடகை ரூ. | மாமன்ற தீர்மான எண்.190 நாள்.16.08.2012 -ன்படி பொதுப் பணித்துறை மதிப்பீட்டின் படி உயர்வு செய்யப்பட்ட வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 31116 | 1<br>2 | முதல்தளம் தெற்கு பகுதி மின்சார ஆய்வாளர் அலுவலகம் மற்றும் இரண்டாம் தளம். மின்சார ஆய்வாளர் அலுவலகம் | 70.9x23.06<br>25.06x13.6<br>82x31.06<br>17.0x12.3 | 2,001<br>2,801 | 16,000 | 60,030<br>84,030 |
| 2 | 31117 | 2 | முதல்தளம் கிழக்கு பகுதி வணிகவரி அலுவலகம் பீளமேடு. தெற்கு வட்டம். | 59.0x23.06<br>25.0x13.06 | 1,725 | 4,700 | 51,750 |
| 3 | 31118 | 3 | முதல்தளம் வடக்கு பகுதி வணிகவரி அலுவலகம், பீளமேடு. வடக்கு வட்டம். | 70.09x23.6 | 1,663 | 5,680 | 49,890 |
| 4 | 31804 பு.எண். (31119) ப.எண். | 4 | இரண்டாம் தளம் தெற்கு பகுதி- கிழக்கு பகுதி நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் கோவை நீலகிரி மாவட்டம். | 82.0x31.6<br>17.9x12.3<br>59.0x23.6<br>12.6x10.0 | 4,313 | 12,466 | 1,29,390 |
| 5 | 31121 | 6 | மூன்றாம் தளம் - கிழக்கு பகுதி வணிகவரி அலுவலகம் ஆவாரம்பாளையம். | 59.0x23.6<br>8.6x12.3 | 1,387 | 4,350 | 41,610 |
| 6 | 31583 | 9 | CBCID - OCU | 70.9x23.6<br>25.0x13.6 | 2,001 | 11,192 | 60,030 |
| 7 | 31708 | | தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்பரேசன் | 82.0x31.6<br>8.6x12.3 | 2,583 | 7,224 | 77,490 |

மேற்கண்ட அலுவலகங்களுக்கு 01.09.2012-முதல் உயர்வு செய்யப்பட்ட மாதாந்திர வாடகை தொகையினை 50சதவீதமாக குறைத்து வாடகையினை நிர்ணயம் செய்ய வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.143 நாள்.28.11.2012ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 6355/12/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 289 நாள் : 29.11.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 143 நாள் 28.11.2012 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 31

**பொருள்** கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.51,72 மற்றும் 82-ல் உள்ள பள்ளி வளாகம் மற்றும் பிரதான அலுவலகத்தில் இயங்கி வரும் தமிழ் நாடு மின்சார வாரிய அலுவலகங்களுக்கு 01.01.2013-ல் பொது பணித்துறை வாடகை மதிப்பீட்டின்படி மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக

**பார்வை** 1.ஆணையாளர் அவர்களின் அலுவல்சாராக் குறிப்பு எண்.11414/2012/எம்.ஏ1 நாள் 26.09.2012.
2.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.144 நாள்.28.11.12

-----

பார்வை 1-ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி மத்தியமண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.52,72 மற்றும் 82-ல் உள்ள பள்ளி வளாகம் மற்றும் பிரதான அலுவலகத்தில் இயங்கி வரும் கீழ் கண்ட தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகங்களுக்கு 01.01.2013-ல் பொது பணித்துறை வாடகை மதிப்பீட்டின்படி மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | பெயர் | கடையின் அளவு (மீ) | மொத்த ச.அடி | தற்போதைய மாத வாடகை ரூ. | பொதுப் பணித்துறை மதிப்பீட்டின் படி நிர்ணயம் செய்யப்பட வேண்டிய வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | **வார்டு எண்.51.** வடகோவை மாநகராட்சி மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள மின்வாரிய வசூல் மையம் | 90 x 6.70 | 569.74 | 1,795/- | 13,190/- |
| 2 | **வார்டு எண்.51.** வடகோவை மாநகராட்சி மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகம். | 14.50x4.0 | 624.31 | 1,509/- | 14,453/- |
| 3 | **வார்டு எண்.72.** அனுப்பர்பாளையம் நஞ்சப்பா ரோடு உயர் நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகம். | தரை தளம்<br>முதல் தளம் | 1,234.50<br>424.50 | 8,396/- | 47,237/- |
| 4 | **வார்டு எண்.82.** டவுன்ஹால் மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள உதவி பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் வசூல் மையம் மின் வாரிய கிடங்கு | | 18,686.50<br>4,098.00 | 15,65,523/- | 18,00,351/- |

மேற்கண்ட அலுவலகங்களுக்கு 01.01.2013-முதல் பொதுப் பணித்துறை மதிப்பீட்டின் படி மாதாந்திர வாடகை தொகையினை நிர்ணயம் செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.144 நாள்.28.11.2012ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 10938/12/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 290 நாள் : 29.11.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 144 நாள் 28.11.2012 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 32

பார்வை- வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.142
நாள்.28.11.2012.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 08.11.2012-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

<u>வரிசை எண்.1</u>

| | இனம் | 08.11.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| அ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் கடைகள் : காய்கறி கடைகள்(4 கடைகள்) கடைஎண்.28,46,47 மற்றும் 95(தற்போது உள்ள நிலையில்) (அரசு மதிப்பு ரூ.950/–) கடை ஒன்றுக்கு | 1100/- (ஒப்பந்தப்புள்ளி) கடை ஒன்றுக்கு | திரு.மங்களீஸ்வரன் |

மேற்படி இனத்திற்கு 11.04.2012, 25.04.12, 20.06.2012, 25.07.12, 31.08.12 மற்றும் 05.10.2012 ஆகிய தேதிகளில் ஆறு முறை மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

08.11.2012-ம் அன்று நடைபெற்ற ஏலத்தில் மேற்கண்ட நான்கு கடைகளையும் எடுத்துக்கொள்ள அரசுமதிப்பு ரூ.950/-ஐ காட்டிலும் கூடுதலாக ரூ.1100/-க்கு திரு.மங்களீஸ்வரன் என்பவரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி கடைகளை ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண்.2

| வ. எண் | இனம் | 05.10.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | 08.11.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| அ | ஆம்னி பேருந்து நிலையத்தில் ராதாகிருஷ்ண ரோடு வணிக வளாகத்தில் அமைந்துள்ள இடத்தில் 117.10ச.மீ அளவுள்ள சிற்றுண்டி அறை. (அரசு மதிப்பு ரூ.83,500/-) | 45,000/- (ஒப்பந்தப்புள்ளி) திரு.சூ.செந்தில்குமார் | 48,750/- (ஒப்பந்தப்புள்ளி) | திரு.சூள. வேலுச்சாமி |

மேற்படி இனத்திற்கு 11.04.2012, 25.04.2012, 10.05.2012 மற்றும் 20.06.2012-ல் மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. அனைத்து ஏலக்கோரிக்கைகளும் அரசு மதிப்பைக்காட்டிலும் குறைவாகவே பெறப்பட்டது. 31.08.2012 நடை பெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. 05.10.2012-ம் நடைபெற்ற ஏலத்தில் அரசுமதிப்பு ரூ.83,500/-ஐ காட்டிலும் குறைவாகவே ரூ.45,000/-க்கு திரு.N.செந்தில்குமார் என்பவரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

08.11.12-ம் தேதி தொடர்ந்து நடை பெற்ற மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் அரசுமதிப்பு ரூ.83,500/-ஐ காட்டிலும் குறைவாகவே ரூ.48,750/-க்கு திரு.S.வேலுச்சாமி என்பவரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. ஏலக்கோரிக்கை அனைத்தும் அரசு மதிப்பைக்காட்டிலும் குறைவாகவே பெறப்பட்டது.

மாநகராட்சிக்கு ஏற்படும் தொடர் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி இனத்தை ஒதுக்கீடு செய்வது குறித்து அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண்.3

| வ. எண் | இனம் | 08.11.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| அ | சக்திரோடு ஆடு அறுவைமனை அருகிலுள்ள பொது உபயோக கடைகள்: கடை எண்.3 (அரசு மதிப்பு ரூ.3,000/-) | 3,400/- (மின் ஏலம்) | திரு.சபரி விக்னேஷ். |

மேற்படி இனத்திற்கு ஆட்டு இறைச்சிக்கடையிலிருந்து பொது உபயோக கடையாக பயன்படுத்தலாம் என மாமன்றத்தில் தீர்மானித்து முதல் முறை ஏலம் கோரியதில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை 08.11.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் கடை எண். 3-க்கு அரசுமதிப்பை காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி கடையை ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண். 1, 2, மற்றும 3 இனங்களுக்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.142, நாள்28.11.212-ல் வரிசை எண்.1,2, மற்றும் 3ற்கு அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/10/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 291 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 142 நாள் 28.11.2012 ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 33**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் குத்தகை இனங்கள் 01.04.2013 முதல் 31.03.2016-ம் ஆண்டு வரை ஒப்படைக்க – பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - நடத்துதல் - மாமன்ற ஒப்புதல் பெறுதல் - தொடர்பாக.

**பார்வை :** வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.148 நாள்.28.11.12

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2013 முதல் 31.03.2016 வரை பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டியுள்ளது.

**குத்தகை இனங்கள் :**

1. சக்தி ரோடு ஆடு மாடு அறுவைமனை
2. காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
3. நவீன கட்டணக்கழிப்பிடம் வ.உ.சி.பூங்கா
4. நவீன கட்டணக்கழிப்பிடம் உப்பிலிப்பாளையம்
5. உக்கடம் பேருந்து நிலையம் பொருள் காப்பகம்
6. உக்கடம் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம்.
7. உக்கடம் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
8. நவீன கட்டணக்கழிப்பிடம் உக்கடம் பேருந்து நிலையம
9. நவீன கட்டணக்கழிப்பிடம் டவுன்ஹால்
10. நவீன கட்டணக் கழிப்பிடம் தியாகி குமரன் மார்க்கெட்
11. தியாகி குமரன் மார்க்கெட் தரை கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.(மாநகராட்சி நிரந்தர கடைகள் நீங்கலாக)
12. இராஜவீதி மருந்தக வளாகம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
13. நவீன கட்டணக் கழிப்பிடம் லிங்கப்ப செட்டி வீதி
14. ராமர் கோவில் வீதி மார்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம்
15. காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் .
16. காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் பொருள் காப்பகம்.

எனவே மேற்காணும் இனங்களுக்கு குத்தகை ஒப்படைப்பு செய்யவும், ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளின்படியும், பொது ஏலம் நடத்தவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.148 நாள்.28.11.2012ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 11130/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 292 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 148 நாள் 28.11.2012 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 34

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - மாத வாடகை இனங்கள் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - ஆவின் பாலகம் மூன்றாண்டு முடிவு - மாத வாடகை நிர்ணயம் செய்தும் மற்றும் மாற்றுத்திறனாளிக்கு ஒதுக்கீடு செய்வது தொடர்பாக மாமன்றத்திற்கு பொருள் வைப்பது - தொடர்பாக.

பார்வை - 1. மாமன்ற தீர்மான எண் 77 நாள் 12.09.2011.
2.தமிழ்நாடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண் 3568, பாலகம் , 2003-12 நாள் 02.03.2012.
3. துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பு நாள் 21.05.2012
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 138 நாள். 28.011.2012

-----------------

சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் நிறுவனத்திற்கு அவர்களது கடை நடத்த இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இனத்திற்கு 31.05.2011 உடன் குத்தகை காலம் முடிவடைந்துள்ளது. மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு வழங்க மேற்படி நிறுவனத்தினர் மனு செய்துள்ளனர். பார்வை 1ல் காண் மாமன்ற தீர்மானத்தின் படி ஆவின் பாலகம் விற்பனை மையத்தின் மாற்றுத் திறனாளிகள் பயனடையும் வண்ணம் குத்தகை உரிமம் வழங்க தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் விற்பனை மையத்தினை மாற்றுத் திறனாளிகள் பயனடையும் வண்ணம் ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரங்கள் தெரிவிக்க சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காண் தமிழ்நாடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அவர்களின் கடிதத்தின்படி ஆவின் பாலகம் நடத்த மாற்றுத் திறனாளியான திரு.ஸ்ரீஜி த/பெ. விஜயக்குமார் என்வருக்கு வழங்கப்பட்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது .

31.05.2011 உடன் மேற்படி இனத்திற்கு குத்தகை காலம் முடிவடைந்துள்ளது. எனவே சம்மந்தப்பட்ட இளம் பொறியாளரின் 27.02.2012ம் தேதிய 01.08.07 அரசு வழிகாட்டி மதிப்பு அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை பார்வை 3ல் காண் துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பில் 01.04.2012 தேதிய அரசு வழிகாட்டி மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்யுமாறு தெரிவித்துள்ளதை தொடர்ந்து 01.06.2011 முதல் வாடகைத் தொகை மறுநிர்ணயம் கீழ்க்கண்டவாறு செய்யப்பட வேண்டும்.

| வ.எண் | குத்தகை இனம் | இடத்தின் அளவு (காலியிடம் ) | தற்போதைய மாதாந்திர உரிமம் மாத வாடகை ரூ. | 15% உயர்வு செய்யப்பட்ட மாத வாடகை ரூ. | அரசு வழிகாட்டுதலின் படி நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஆவின் பாலகம் | 12’ X 12’ | 1090 | 1256 | 3600 |

எனவே அதிகப்படியாக உள்ள மாத வாடகை ஆவின் பாலகத்திற்கு ரூ. 3600/- நிர்ணயம் செய்யவும், மற்றும் மாற்றுத் திறனாளியான திரு.ஸ்ரீஜி த/பெ. விஜயக்குமார் என்பவருக்கு ஒதுக்கீடு செய்ய பொருள் வைக்கப்பட்டதில், பார்வையில் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குவின் தீர்மானத்தில் பேருந்து நிலையத்தில் நெரிசல் ஏற்பட வாய்ப்புள்ளதால் உரிமம் ரத்து செய்யலாம் என மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தின்பேரில் மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றத்தின் முடிவிற்கு . ந.க.எண்.4675/2011/ கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 293 நாள் : 29.11.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 138 நாள் 28.11.2012 ன் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 35**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - மாத வாடகை இனங்கள் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - டேண்டீ மூன்றான்டு முடிவு - மாத வாடகை தொகை நிர்ணயம் செய்வது, உரிமம் நீட்டிப்பு மாமன்றத்திற்கு பொருள் வைப்பது - தொடர்பாக.

பார்வை - 1. மாமன்ற தீர்மான எண் 77 நாள் 12.09.2011.
2.திரு.ரோசலின் சைமன் என்பவர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் அவர்களிடம் வழங்கிய மனு நாள் 17.02.2012.
3. துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பு நாள் 21.05.2012
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 139 நாள். 28.011.2012

----------------

சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் டேண்டீ நிறுவனத்திற்கு அவர்களது கடை நடத்த இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இனத்திற்கு 31.05.2011 உடன் குத்தகை காலம் முடிவடைந்துள்ளது. மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு வழங்க மேற்படி நிறுவனத்தினர் மனு செய்துள்ளனர். பார்வை 1ல் காண் மாமன்ற தீர்மானத்தின் படி டேண்டீ விற்பனை மையத்தின் மாற்றுத் திறனாளிகள் பயனடையும் வண்ணம் குத்தகை உரிமம் வழங்க தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் விற்பனை மையத்தினை மாற்றுத் திறனாளிகள் பயனடையும் வண்ணம் ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரங்கள் தெரிவிக்க சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காண் கடிதத்தின்படி டேண்டீ நிறுவனம் ஒதுக்கீடு செய்து கடை நடத்தி வரும் முன்னாள் படைவீரரின் மனைவி திருமதி.ரோசலின் சைமன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் அவர்களிடம் 17.02.2012 அன்று மேற்படி இடத்தினை தமக்கு ஒதுக்கீடு செய்ய மனு செய்துள்ளார்.

31.05.2011 உடன் மேற்படி இனத்திற்கு குத்தகை காலம் முடிவடைந்துள்ளது. எனவே சம்மந்தப்பட்ட இளம் பொறியாளரின் 27.02.2012ம் தேதிய 01.08.07 அரசு வழிகாட்டி மதிப்பு அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை பார்வை 3ல் காண் துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பில் 01.04.2012 தேதிய அரசு வழிகாட்டி மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்யுமாறு தெரிவித்துள்ளதை தொடர்ந்து 01.06.2011 முதல் வாடகைத் தொகை மறுநிர்ணயம் கீழ்க்கண்டவாறு செய்யப்பட வேண்டும்.

| வ.எண் | குத்தகை இனம் | இடத்தின் அளவு (காலியிடம்) | தற்போதைய மாதாந்திர உரிமம் மாத வாடகை ரூ. | 15% உயர்வு செய்யப்பட்ட மாத வாடகை ரூ. | அரசு வழிகாட்டுதலின் படி நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | டேண்டீ | 6’ X 6’ | 360 | 414 | 900 |

எனவே அதிகப்படியாக உள்ள மாத வாடகை டேண்டீக்கு ரூ. 900/- நிர்ணயம் செய்யவும், மற்றும் திருமதி. ரோசலின் சைமன் அவர்களுக்கு உரிமம் நீட்டிப்பு செய்வது தொடர்பாக பொருள் வைக்கப்பட்டதில், பார்வையில் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குவின் தீர்மானத்தில் பேருந்து நிலையத்தில் நெரிசல் ஏற்பட வாய்ப்புள்ளதால் உரிமம் ரத்து செய்யலாம் என மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தின்பேரில் மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றத்தின் முடிவுற்கு ந.க.எண்.4675/2011/ கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 294 நாள் : 29.11.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 139 நாள் 28.11.2012 ன் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 36

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமையாணை இனம் - நீக்கம் செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைப்பது - தொடர்பாக

பார்வை - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 140 நாள் 28.11.2012

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் உள்ள சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமையாணை இனத்திற்கு 20.06.2012-ம் தேதியில் பொது ஏலம் நடைபெற்றதில் திரு. எல்.என்.சையத் இப்ராஹீம் என்பவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,37,500/- க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்தார். இத்தொகை மாமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதின் பேரில் ஏலதாரருக்கு ஏலத்தொகையை செலுத்த அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேலும், தொலைபேசி வாயிலாகவும், பலமுறை தெரிவித்தும் ஏலதாரரால் தொகை செலுத்தப்படவில்லை.

எனவே மேற்படியாரால் செலுத்தப்பட்ட வைப்புத்தொகைகள் ரூ.13,500/- னை பரிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் சேர்க்கலாம். மேலும், சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமையானை இனத்திற்கு ஐந்து முறை பொது ஏலம் விடப்பட்டும் எவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. மேலும், அரசு தொகையினைவிட குறைவாக ஏலம் கோருவதாலும், ஏல விளம்பர செலவினை தவிர்க்கும் பொருட்டு இவ்வினத்தை குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்ய பார்வையில் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குவின் தீர்மானத்தின்படி மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 864/2012/ கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 295 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 140 நாள் 28.11.2012 ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 37

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - 01. 04. 2013 முதல் 31.03.2016 ம் ஆண்டு வரை ஒப்படைக்க - பொது ஏலம் நடத்துதல் - மாமன்றத்திற்கு பொருள் வைப்பது - தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2013 முதல் 31.03.2016 வரை பொது ஏலம் நடத்தி ஒப்படைப்பு செய்யப்பட வேண்டியுள்ளது.

*இனங்கள்*

1. சிங்காநல்லூர் பேருந்து நிலையம் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்.
2. சிங்காநல்லூர் தினசரி சந்தையில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்.
3. சிங்காநல்லூர் ஆடு அறுவை மையம் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்.
4. சௌரிபாளையம் ஆடு அறுவை மையம் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்.

எனவே மேற்காணும் இனங்களுக்கு குத்தகை ஒப்படைப்பு செய்யவும், ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளின்படியும், பொது ஏலம் நடத்த வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 145 நாள். 28.11.2012 –ன் படி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 014902/2012/கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 296 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 145 நாள் 28.11.2012 ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 38

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வரும் மின்வாரிய கட்டிடத்திற்கு 01.01.2013 முதல் சந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்தல் - மாமன்றத்திற்கு பொருள் வைப்பது - தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண். 69 திருச்சி சாலை, இராமநாதபுரத்தில் மாநகராட்சிக்கட்டிடம் 29 X 48 = 1392 சதுரடி பரப்பளவில் ஆர்.சி.சி கட்டிடம் தமிழ்நாடு மின்வசார வாரியத்திற்கு ரூ.43,996/- க்கு மாத வாடகைக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் கட்டிடத்திற்கு சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்ய உதவிப் பொறியாளர் அவர்களின் குறிப்பு கோரப்பட்டதில் சதுரடிக்கு ரூ.49/- எனத் தெரிவித்துள்ளார். மேற்படி கட்டிடம் அரசு நிறுவனத்திற்கு அளிக்கபட்டுள்ளதாலும், வாடகை நிர்ணயத்திற்கு பின்னர் பல்வேறு கோரிக்கை மனுக்கள் வாடகை குறைக்க கோரி வரப்பெறுவதாலும், சதுரடிக்கு வாடகை ரூ. 39/- எனக்கொண்டு மேற்காணும் கட்டிடத்திற்கு மாத வாடகையாக (1392 X 39 = 54,288) ரூ. 54,288 ஆக 01.01.2013 முதல் நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 146 நாள். 28.11.2012 –ன் படி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 014988 /2012/கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 297 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 146 நாள் 28.11.2012 ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 39

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரியம் – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் இயங்கிவரும் மின்வாரிய உபயோகத்திலுள்ள கட்டிடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்து வசூலிப்பது – தொடர்பாக.

---------

அரசாணை எண் **156** நாள் **10.6.94**–ன்படி **1.11.94**–ல் மின்வாரியம் மாநகராட்சியின் பொறுப்பில் இருந்து தமிழ்நாடு மின்சார வாரியம் பொறுப்பேற்றுக் கொண்டது.

தமிழ்நாடு மின்சார வாரியம் பொறுப்பேற்றுக் கொண்ட **1.11.94** முதல் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இடங்களில் இயங்கிவரும் மின்வாரிய உபயோகத்திலுள்ள கட்டிடங்களுக்கு பொதுப்பணித் துறை மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து **31.12.2006** முடிய செலுத்தப்பட வேண்டிய வாடகை விபரங்களைத் தெரிவித்து வாடகை செலுத்த கோரி முதன்மைப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், டாடாபாத், கோயம்புத்தூர் அவர்களுக்கு ந.க. எண். **1601/2007/MD2** நாள் **8.2.2007**–படி கடிதம் எழுதப்பட்டுள்ளது.

1. AEE அலுவலகம், புலியகுளம் ரோடு – Rs.**11,921/**– p.m.
2. AEE அலுவலகம், திருச்சி சாலை, ராமநாதபுரம் – Rs.**33,267/**– p.m.
3. AEE அலுவலகம், ஆர்.எஸ்.பரம், கென்னடி தியேட்டர் அருகில் – Rs.**36,576/**– p.m.
4. மின் கட்டண வசூல் மையம், வடகோவை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகம் – Rs.**1,141/**–p.m.
5. AEE அலுவலகம், வடகோவை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகம் – Rs.**1,357/**– p.m.
6. AEE அலுவலகம் அனுப்பர்பாளையம், டாக்டர் நஞ்சப்பா ரோடு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வளாகம் – Rs.**6,349/**– p.m.
7. தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகங்கள், டவுன்ஹால் மாநகராட்சி கட்டிட வளாகம் – Rs.**11,83,760/**– p.m.

இதன்படி **1.11.94** முதல் **31.12.2012** முடிய ரூ.**29,94,89,882/**– செலுத்தக் கோரி முதன்மைப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், டாடாபாத், கோயம்புத்தூர் அவர்களுக்கு ந.க. எண். **14824/95/**பி5 நாள்**18.9.2012**–படி கடிதம் எழுதப்பட்டுள்ளது. இருதரப்பிலும் இது சம்பந்தமாக அரசிடமிருந்து உரிய உத்திரவுகள் பெறவேண்டி உள்ளது. அரசாணை பெறப்பட்டவுடன் நிலுவைத் தொகையினை பெறலாம்.

தற்போது மேற்கண்ட வாடகை நிர்ணயம் **1.4.2003** வழிகாட்டி மதிப்பீட்டின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாலும், இந்த வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு **9** ஆண்டுகள் கடந்து விட்டதாலும் மேற்கண்ட 7 கட்டிடங்களுக்கும் **1.1.2013** முதல் சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்து மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தடுக்கலாம். இப்பொருள் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.**154** நாள் **28.11.2012**-படி அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க. எண். **14824/95.**பி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 298 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 154 நாள் 28.11.2012 ன் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 40

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி- மேற்கு மண்டலம் - வார்டு எண்.22 B11-காவல் நிலையம் மற்றும் வார்டு எண்.23 உள்ள ஆரோக்கியசாமிரோடு(மே) தமிழ்நாடு இசைக்கல்லூரிக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகை தொகையை குறைப்பது - தொடர்பாக.

பார்வை- 1. மாமன்ற தீர்மான எண்.177 நாள்.16.08.2012.
2.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.27.11.2012

------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்கு வார்டு எண்.22 மற்றும் 24-ல் உள்ள B11-காவல் நிலையம் மற்றும் தமிழ்நாடு இசைக்கல்லூரிக்கு மாதாந்திர வாடகை தொகை முறையே ரூ.8432/- மற்றும் ரூ.14509/- செலுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட இனங்களுக்கு பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி பொதுப்பணித்துறை மதிப்பீட்டின் படி வாடகை தொகை முறையே ரூ.68062/- மற்றும் 227360/- என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் இரண்டு துறைகளுக்கும் நில உரிமை மாற்றம் செய்ய கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட இனங்களுக்கு மாதாந்திர வாடகை தொகை முறையே ரூ.25,000/- மற்றும் ரூ.50,000/- என நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.150 நாள்.28.11.2012-ன்படி அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.1476 / 2012 / அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 299 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 150 நாள் 28.11.2012 ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 41**

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி- மேற்கு மண்டலம் - வார்டு எண்.24 D.B.ரோடு பகுதியில் உள்ள – தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலம் கட்டிடத்திற்கு 1.1.2013 முதல் பொதுப்பணித்துறை அரசுவழிகாட்டி மதிப்பீட்டின்படி வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக.

பார்வை- ஆணையாளர் அவர்களின் 22.11.2012-ம் தேதி உத்திரவு

------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட D.B.ரோடு, வார்டு எண்.24 தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலக கட்டிடம் 1070 சதுரடி ஆகும். மேற்படி கட்டிடத்திற்கு 1.1.2010 முதல் 31.12.2012 வரை மாத வாடகை ரூ.48371/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பார்வையில் கண்ட ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படி 01.01.2013 முதல் 15 சதவீதம் உயர்வு செய்து மாத வாடகை ரூ.55627/- என நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.149 நாள்.28.11.2012-ன்படி அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தினஅனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 12618/2012/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 300 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 149 நாள் 28.11.2012 ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 42**

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி- மேற்கு மண்டலம் - வார்டு எண்.22 பகுதியில் உள்ள - காமராஜபுரம் சமுதாயக்கூட கட்டிடத்தினை - தபால் துறை அலுவலகத்திற்கு கோரியுள்ளதை ஒப்படைப்பது-தொடர்பாக.

பார்வை- கண்காணிப்பாளர், தபால் துறை அலுவலகம், கோவை – 18, அவர்களின் No.D15/04/V/2010-11 Dated at Coimbatore 641018 the 16.11.2012

------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.22, பகுதியில் உள்ள காமராஜபுரம் சமுதாயகூட கட்டிடத்தினை பார்வையில் கண்ட கடிதத்தில் தபால் துறை அலுவல பயன்பாட்டிற்கு கோரியுள்ளனர். மேற்படி கட்டிடம் 7605 சதுரடி உள்ளது. இக்கட்டிடத்திற்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி மாதவாடகை ரூ.60,000/- என நிர்ணயம் செய்து ஒப்படைப்பது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.141 நாள்.28.11.2012-ன்படி அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தினஅனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 12378/2012/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 301 நாள் : 29.11.2012**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தினை தபால் துறைக்கு கொடுக்கவேண்டாம் என்றும், சமுதாயக் கூடத்தை புனரமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 43**

**பொருள்:-** கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட – வருடாந்திர குத்தகை இனங்கள் 31.03.2013–ல் முடிவடைதல்– தொடர்பாக

**பார்வை:-** 1.அலுவல்சாரா குறிப்பு ந.க.எண் 4642/2010/எம்ஏ1 நாள் 01/11/12

2.வ.வி.நி.கு.தீர்மானஎண். 147, நாள்.28.11.2012.

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்களின் உரிம காலம் 31.03.2013–ல் முடிவுறும் இனங்களின் பட்டியல் பின் வருமாறு

| வ. எண் | வார்டு எண் | இனம் | உரிமதாரர் | 2012–2013ம் ஆண்டு உரிமத்தொகை |
|---|---|---|---|---|
| 1 | 85 | நவீன கட்டண கழிப்பிடம் செட்டி வீதி | ரகமத்துல்லா | 2,41,000 |
| 2 | 86 | உக்கடம் ஆடு அறுவை மனை | கந்தசாமி | 3,25,000 |
| 3 | 99 | செட்டிபாளையம் ரோடு மாடுவதை சாலை | த. ஜக்ருதீன் | 21,500 (மாத வாடகை) |

அ) வ.எண் 1. வார்டு 85–ல் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் செட்டி வீதியின் உரிமதாரர் வி. கே. ரகமத்துல்லாக்கு 25.03.2010–ம் தேதியில் நடைபெற்ற பொது ஏலம் மூலம் முந்தைய தெற்கு மண்டலத்தால் (தற்போதைய மத்திய மண்டலம்) ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

ஆ) வ. எண்–2 வார்டு 85–ல் உள்ள உக்கடம் புதிய ஆடு அறுவை மனை 22.09.2010 அன்று நடைபெற்ற பொது ஏலம் மூலம் திரு. என். கந்தசாமிக்கு மாநகரமன்ற தீர்மானம் எண் 121/29.10.10–ன் படி முந்தைய தெற்கு மண்டலத்தால் (தற்போதைய மத்திய மண்டலம்) ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

இ) வ. எண்–3 வார்டு 99–ல் செட்டி பாளையம் ரோட்டில் உள்ள மாடு வதை சாலை 21.09.2010ம் தேதிய பொது ஏலத்தில் ந.க.எண் 2487/2010/அ7 நாள் 28.09.2010–ன் படி திரு. த. ஜக்ருதீன் என்பவருக்கு முந்தைய குறிச்சி நகராட்சியின் மூலம் (தற்போது தெற்கு மண்டலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) ஒப்படை செய்யப்பட்டுள்ளது

மேற்படி இனங்களை 2013–2016ம் ஆண்டிற்கு பொது ஏலம் மூலம் ஒப்படை செய்வதற்கு வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண், 147 நாள் 28.11.2012ல் ஒப்புதல் வழங்கியுள்ளது, எனவே இதுகுறித்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 698/2012/பி6

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 302 நாள் : 29.11.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 147 நாள் 28.11.2012 ன் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 44

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 27.11.2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்ச-த்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 8311/12/ எம்.டி.1 | மேற்கு மண்டலம், வார்டு எண்கள். 8 மற்றும் 9 ஆகிய பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை அமர்த்துதல் | 55.00 | 19-11-2012 முதலாவது அழைப்பு | 1.தி/ள் ஆர். மயில் வாணன், கோயம்புத்தூர் 4.89% அதிகம்<br>2.தி/ள் ஸ்ரீனிவாசா இன்ஜினியரிங் ஓர்க்ஸ், கோயம்புத்தூர் 0.90% குறைவு | .தி/ள் ஸ்ரீனிவாசா இன்ஜினியரிங் ஓர்க்ஸ், கோயம்புத்தூர் 0.90% குறைவு |
| 2 | 8310/12/ எம்.டி.1 | மேற்கு மண்டலம், வார்டு எண்கள். 5,6 மற்றும் 7 ஆகிய பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை அமர்த்துதல் | 58.00 | 19-11-2012 முதலாவது அழைப்பு | 1.தி/ள் ஆர். மயில் வாணன், கோயம்புத்தூர் 4.89% அதிகம்<br>2.தி/ள் ஸ்ரீனிவாசா இன்ஜினியரிங் ஓர்க்ஸ், கோயம்புத்தூர் 0.90% குறைவு | .தி/ள் ஸ்ரீனிவாசா இன்ஜினியரிங் ஓர்க்ஸ், கோயம்புத்தூர் 0.90% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண். 1 முதல் 2 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 8311/12/ எம்.டி.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 303 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 45

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22-11-2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 11865/12/ எம்.டி.2 | வார்டு எண் 55ல் உள்ள செங்காடு மைதானம் அருகில் வணிகப் பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 8.20 | 25-10-2012 முதல் அழைப்பு | 1.திரு.எ. வெங்கடாசலம், கோயம்புத்தூர் 4.77% அதிகம்<br>2.திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் 5.63% அதிகம் | திரு.எ. வெங்கடாசலம், கோயம்புத்தூர் 4.77% அதிகம் |
| 2 | 9323/12/ எம்.டி.4 | வார்டு எண் 70ல் உள்ள புலியகுளம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி எதிரில் வணிகப் பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 9.80 | 25-10-12 முதல் அழைப்பு | 1.திரு.ஆர். உமாபதி, கோயம்புத்தூர் 9.04% அதிகம்<br>2.திரு.வி.பி. மனோகரன், கோயம்புத்தூர் 4.97% அதிகம் | திரு.வி.பி. மனோகரன், கோயம்புத்தூர் 4.97% அதிகம் |
| 3 | 11192/12/ எம்.டி.2 | வார்டு எண்.55ல் காய்கடை மைதானத்தில் வணிகப் பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல். | 20.95 | 29-10-12 முதல் அழைப்பு | திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் 4.81% அதிகம் | திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் 4.81% அதிகம் |
| 4 | 12013/12/ எம்.டி.2 | வார்டு எண்.28ல் உள்ள சரவணம்பட்டி வார்டு அலுவலகத்தில் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 29.50 | 31-10-12 முதல் அழைப்பு | திரு.கே. கோவிந்தராஜ், கோயம்புத்தூர் 8.95% அதிகம் | திரு.கே. கோவிந்தராஜ், கோயம்புத்தூர் 4.96% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 5 | 11616/12/ எம்.டி.2 | வார்டு எண்.1ல் உள்ள துடியலூர் தினசரி சந்தை அருகில் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 49.80 | 31-10-12 முதல் அழைப்பு | தி/ ள் ஆனந்தா எலெக்ட்ரிக்கல்ஸ் அண்ட் ஒயரிங் கான்ட்ரக்டர்ஸ், கோயம்புத்தூர் 5.67% அதிகம் | தி/ ள் ஆனந்தா எலெக்ட்ரிக்கல்ஸ் அண்ட் ஒயரிங் கான்ட்ரக்டாஸ், கோயம்புத்தூர் 4.80% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண். 1 முதல் 5 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 11865/2012/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 304 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 46

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.11.2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்ச-த்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 11937/12/ எம்.டி.1 | வார்டு எண்.25ல் உள்ள ஆரோக்கியசாமி ரோடு மேற்கு, வடபுறம் B-பிளாக்கில் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 67.50 | 31-10-2012 முதலாவது அழைப்பு | 1.தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.44% அதிகம்<br>2.திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் 32.19% அதிகம் | தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.44% அதிகம் |
| 2 | 11940/12 எம்.டி.1 | வார்டு எண்.17ல் உள்ள மருதமலை பேருந்து முனையத்தில் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 44.00 | 31-10-2012 முதலாவது அழைப்பு | 1.தி/ள் கே.ரவிகுமார், கோயம்புத்தூர் 4.73% அதிகம் | தி/ள் கே.ரவிகுமார், கோயம்புத்தூர் 4.73% அதிகம் |
| 3 | 11934/12/ எம்.டி.1 | வார்டு எண்.18ல் உள்ள மருதமலை பேருந்து முனையத்தில் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 26.40 | 31-10-2012 முதலாவது அழைப்பு | 1.தி/ள் கே.ரவிகுமார், கோயம்புத்தூர் 4.83% அதிகம் | 1.தி/ள் கே.ரவிகுமார், கோயம்புத்தூர் 4.83% அதிகம் |
| 4 | 11938/12/ எம்.டி.1 | வார்டு எண்.24ல் உள்ள ஆரோக்கியசாமி ரோடு மேற்கு, வடபுறம் A-பிளாக்கில் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 67.50 | 31-10-2012 முதலாவது அழைப்பு | 1.தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.44% அதிகம்<br>2.திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் 32.19% அதிகம | 1.தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.44% அதிகம |
| 5 | 11939/12/ எம்.டி.1 | வார்டு எண்.23ல் உள்ள திருவேங்கடசாமி ரோடு மேற்கு, வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 45.80 | 31-10-2012 முதலாவது அழைப்பு | 1.தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.87% அதிகம்<br>2.திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் 31.75% அதிகம | 1.தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.87% அதிகம |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- வரிசை எண். 1 முதல் 5 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 11937/12/ எம்.டி.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 305 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 47

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.11.2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள்

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9347/12/ எம்.டி.4 | வார்டு எண்.25ல் உள்ள கிருஷ்ணசாமி சாலையில், தரைதளம், முதல் தளம், மின்சார அறையுடன் கூடிய வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 54.00 | 31-10-2012 முதலாவது அழைப்பு | 1.தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.89% அதிகம்<br>2.திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் 28.03% அதிகம் | தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.89% அதிகம் |
| 2 | 10845/12 எம்.டி.4 | வார்டு எண்.52ல் உள்ள ராதாகிருஷ்ணன் சாலையில் வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் | 29.70 | 31-10-2012 முதலாவது அழைப்பு | 1.தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.89% அதிகம்<br>2.திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் 31.96% அதிகம் | தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.89% அதிகம் |

வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- வரிசை எண். 1 முதல் 2 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 9347/12/ எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 306 நாள் : 29.11.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி